Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் ௳ (22-7-66) இதழ் 162

பராபவ ஆடி 6 ரபி: ஆகி 3 வெள்ளிக்கிழமை

பட்டு உடைகளை சாயம் போடுவதும் ட்ரைக்கிளீன் செய்வதும்



சன்லைட் டையேர்ஸ் அன் ட்ரைகிளீனேர்ஸ்
(ராணித்தியேட்டருக்கு அருகாமை)
பெரியகடை யாழ்ப்பாணம்.
போன்: 474. தந்தி: ட்ரைக்கிளீன்

### மகாநாயக்கதேரோ நாடு திரும்பினர்

கொழும்பு, வியாழன்

தாய்லந்து சென்றிருந்த மல்வத்தை மகாநாயக்க தேரோ இன்று கொழும்பு திரும்பினர்.

விமானநிலையத்தில் கவர்னர் ஜெனரல், பிரதமர் ஆகியோர் அவரை வரவேற்றார்கள்!

தாய்லந்து அரசாங்கம் தங்களுக்குச் சிறந்த வரவேற்பு அளித்ததெனத் தூதுகோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் கூறினர்.

## சிங்கள ஆசிரியர் நியமனம்

# 'தமிழரசுக் கட்சியுடன் கலந்தாலோசிப்பேன்'

## பிரதிநிதிகள் சபையில் பிரதமர் அறிவிப்பு

### தேசிய ஐக்கியம் குறித்து பெருமிதம்

கொழும்பு, வியாழன்

தமிழரசுக் கட்சியுடனும், கல்வி அமைச்சருடனும் தாம் முதலில் ஆலோசனைகள் நடத்திய பிறகுதான், வடக்கு கிழக்கு மாகாணங்களில் அவசியமான இடங்களுக்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படுவார்கள் என்று பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் கூறினர்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை அரசாங்கத் தரப்பில் முடித்துவைத்து அவர் உரைநிகழ்த்தினர். பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

யாழ்ப்பாணப் பிரதேசம் ஏற்கனவே தனிப் பிரதேசமாக இயங்க ஆரம்பித்து விட்டதா என்று இன்று கொழும்பு தெற்கு சமசமாஜக்கட்சி எம். பி. திரு. பெர்னாட் சொய்ஸா மக்கள் பிரதிநிதிகள் சபையில் கேட்டார்.

தாமும், திரு. பீட்டர் கெனமனும் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது குறித்த, செனட்டர் திருச்செல்வம் "எந்த தைரியத்தில் அவர்கள் யாழ்ப்பாணம் விஜயம் செய்தனர்" என்று கேட்டிருப்பதிலேயே இந்தக் கேள்வியை எழுப்புவதாக திரு. சொய்ஸா கூறினர். சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையின் மீது திரு. பெர்னாட் சொய்ஸா பேசினர்.

நாட்டைப் பிரிக்கும் நடவடிக்கை முடிந்து விட்டதா? யாழ்ப்பாணம் செல்வதற்கு விசா எடுக்கவேண்டிய அளவுக்கு அது தனி ராஜ்யமாகி விட்டதா?" என்று அவர் கேட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

#### ஒப்பந்தம்

அரசாங்கத்துக்கும் தமிழ் அரசுக்கட்சிக்குமிடையிலான ஒப்பந்தம் நாட்டை பிளவு படுத்துவதில் தான் கொண்டு போய் விடும். எமது கட்சி சமஷ்டி ஆட்சியை எதிர்க்கின்றது. அது போலவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் எதிர்க்கின்றது. ஆனல் தமிழர்கள் தென்பகுதிக்கு வருவதை யாரும் எதிர்த்ததில்லை. தேசிய ஐக்கியம் என்பது வெறும் தில்லுமுல்லு. சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க

(8-ம் பக்கம் பார்க்க)

---

ஜெமினி10

## மேஜர் கொலின்ஸின் அபூர்வ சாதனை

கேப்கென்னடி, ஜூலை 21

'ஜெமினி 10" விண்வெளி வீரரான மேஜர் கொலின்ஸ் வான்வெளில் இதுவரை எவரும் செய்யாத அற்புத சாதனை ஒன்றை நிகழ்த்தினர்.

கடந்த மார்ச் 16-ந் திகதி அனுப்பப்பட்ட 'எஜினா 8' என்ற ராக்கெட்டிலிருந்து கருவிதகடு ஒன்றை அவர் விண்வெளியில் நடந்தபடியே அகற்றினர். இந்தராக்கெட் இதுவரை 440 லட்சம் மைல் பிரயாணம் செய்திருக்கிறது. 400 மைலுக்கு மேல் இரு விண்வெளி வீரர்களும் பிரயாணம் செய்தார்கள். மனிதன் இதுவரை சென்ற உயரத்தில் இதுவே ஆகக்கூடுதலாகும்.

50 அடி நீள பிராணவாயு கருவியுடன் மேயர் கொலின்ஸ் இணைக்கப்பட்டிருந்த போது இந்த அபூர்வ சாதனையை மேற்கொண்டார்.

## யாழ்ப்பாணம் ரயிலில் திருட்டுகள் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், வெள்ளி

ரயில் பிரயாணிகள் உஷார். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வரும் மெயில் ரயிலில் திருட்டுகள் நடைபெறுவது கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்த மெயில்ரயிலில் பிரயாணம்செய்த இரண்டு நபர்களிடம் திருடர்கள் சிலர் தங்களது கைவரிசையைக் காட்டிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இவர்களில் ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிள், மற்றவர் பட்டினசபைக் காரியதரிசி. மெயில் ரயில் பளை ரயில் நிலையத்தைக் கடந்தபின்னரே இத்திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றனவாம் குறிப்பிட்ட இரு நபர்களினது உடுப்புப் பெட்டிகளையும் அபேஸ்செய்துள்ளனர்

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் ரயிலில் பிரயாணம்செய்த ஒருவரிடமிருந்து சுமார் 5000 ரூபா பெறுமதியான தங்கப் பவுண்களைக்கொண்ட ஒரு சூட்கேஸ் பறிபோனது வாசகநேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

## பிரதமர், மந்திரிகளை வரவேற்க விரிவான ஏற்பாடுகள்

### காங்கிரஸ் பொதுச்சபை கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ்காங்கிரஸின் 21-வது வருடாந்த மகாநாடு சம்பந்தப்பட்ட விஷயங்கள் நேற்றுமாலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் பொதுச் சபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன

தமிழ்காங்கிரஸ் உப தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மகாநாட்டையொட்டி ஒரு விசேஷமலர் வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மூன்றுநாட்கள் தொடர்ந்து நடைபெறும் இம் மகாநாட்டின் இறுதிநாளன்று பிரதமர் டட்லி சேனநாயகாவும், தேசிய அரசாங்கத்தைச்சேர்ந்த மந்திரிகளும் இலங்கைதொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமானும் சொற்பொழிவாற்றுவார்கள்.

8-ம் பக்கம் பார்க்க

## தொழில்நுட்பக்கல்வி நகல்மசோதா

### மந்திரிசபையில் கல்வி மந்திரி சமர்ப்பித்தார்

கொழும்பு, வியாழன்

தொழில்நுட்பக் கல்வி நகல் மசோதாவை கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை மந்திரிசபைக்குச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது. உத்தேச மசோதாவில் பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இம்மசோதாவை அடுத்த வார இறுதியில் மந்திரிசபை ஆராய்ந்து வேண்டிய மாற்றங்களைச் செய்யும் என நம்பப்படுகிறது.

#### புதிய திட்டங்கள்

கட்டாய வேலை அனுபவம் படிப்படியாக ஆங்கில வகுப்புகளை நீக்குதல், பாடசாலைகளை முறையாகத்தரம் பிரித்து புனர்நிர்மாணம் செய்வது, தேசிய கல்வி நிதியொன்றை ஸ்தாபித்தல் போன்ற பல புதிய திட்டங்களை இப்புதிய மசோதா கொண்டுள்ளது. இவற்றுடன் ஜி. சி. ஈ. (சாதாரணம்) தராதரப் பரீட்சையையும் நீக்கவும் இம்மசோதா வழிவகுத்துள்ளது.

#### பட்ஜட்டுக்குப் பின்

வரவு-செலவுத்திட்டவிவாதத்தின்பின்னர் இம்மசோதாவிற்கு அரசாங்கம் முதலிடம் கொடுக்குமெனவும் தெரியவருகிறது.

## ரொபர்ட் கென்னடி

வாஷிங்டன், ஜூலை 21

போர்மோஸா ஐ நா.வில் இடம்பெற்றிருக்கும் அதேசமயம், சீனாவையும் ஐ. நா. வில் அனுமதிக்க அமெரிக்கா இணங்க வேண்டுமென்றும், அமெரிக்காவின் ஆசியக் கொள்கை புதிதாக இருக்க வேண்டுமென்றும் செனட்டர் ரொபர்ட் கென்னடி கூறினார்.

## மரண அறிவித்தல்

முல்லைத்தீவைச் சேர்ந்த இளைப்பாறிய அம்பலவாண முதலியாரின் மகன் போஸ்மாஸ்டர் நடராசா காலமாகிவிட்டார் இவர் செல்வநாயகியின் அருமைக்கணவரும், அம்பலவாணர், ரங்கநாயகி, ரங்கநாதன் ஆகியோரின் அருமைத் தந்தையும், கைலாயநாயகி அம்மா, காந்திமதி அம்மா அவர்களின் சகோதரனும், கந்தசாமி ஜெயலட்சுமி, யோகரெத்தினம் ஜெயலெட்சுமி, குகதாசன் கணேசன், இராசலிங்கம், சோமநாதன் ஆகியோரின் மாமனுமாவர். அன்னரது பூதவுடல் இன்று 22-ந்திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் பலாலிரோட் திருநெல்வேலி 'றங்கவாசா' இல்லத்திலிருந்து இறுதிக் கிரியைக்காக தின்னவேலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

அறிவிப்பவர்: ந. அம்பலவாணர் 684

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

**தச்சுத்தொழிலாளர்**

தளபாடத் தொழிற் சாலைக்கு தேர்ச்சி பெற்ற தச்சுத்தொழிலாளர் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ விக்னேஸ்வரா தளபாடத் தொழிற்சாலை, புகையிரத விதான வீதி, மல்லாகம். 778

**மனேஜர், ஸ்டோர்கீப்பர்...**

மனேச்சர், ஸ்டோர்கீப்பர், வேலை மேற்பார்வையாளரும். காடு அழிப்பதற்கும், மரம் அரிவதற்கும் கொன்ருக்டர்களும் தேவை. விபரங்களுக்கு நேரில் விண்ணப்பிக்கவும். இஞ்சினியறிங் பவர் யூனிற், 2-ம் மாடி சங்கரப்பிள்ளை கட்டிடம், ஆஸ்பத்திரிவீதி. யாழ்ப்பாணம். 775

**மனேஜர், பணப்பொறுப்பாளர்;**

ஜி. சி. ஈ. பரீட்சையில், ஆங்கிலம், கணக்கு ஆகிய பாடங்களில் சித்தி அடைந்தவரும், கைத்தொழில், வர்த்தகம், ஆகியவற்றில் நல்ல அனுபவமுள்ளவருமான மனேஜரும், பணப்பொறுப்பாளரும் உடனடியாகத் தேவை. முறையே ரூபா 1500/-, ரூபா 1000/- பிணைப்பணம்கட்டக்கூடியவராகவிருத்தல் வேண்டும். தகுதிஉள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் 25-7-66 ல் காலை 9—12 வரை கீழ்க்காணும்விலாசத்திற்கு விண்ணப்பத்துடன் நேரில் வரவும். 1-8-66-ல் நியமனம் வழங்கப்படும். 91, ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம், (இலங்கை பெற்ரோலியம் கூட்டு ஸ்தாபனத்திற்கு முன்ஞல்). வீ. ஞானசங்கரி. 780

## தேவை

**பணம்:**

யாழ்ப்பாணத்தில் இறக்குமதிக்காட்டாக்கள் உள்ள ஓர் ஸ்தாபனத்திற்கு ரூபா 15000. தேவை. லாபத்தில் பங்குதரலாம். அல்லது நியாயமான வட்டிதரலாம். வியாபாரம் நடக்கும் கடைகள் பொறுப்பாகக் கொடுக்கப்படும். விபரத்திற்குக் கடிதமூலம்தொடர்புகொள்ளவும். வி. இல. 776, 'ஈழநாடு' மேற்பார்த்து என்ற விலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 776

## விற்பனைக்கு

**பாடப்புத்தகம்**

மாணவர் கணிதத்தில் திறமையெய்த-வாழ்வு வளம் பெற சிவக்கொழுந்து 2, 3, 4, 5, 6, 7, 8-ம் மனக்கணிதங்கள்-ஜி. ஸி. ஈ. Prep ஜி. ஸி. ஈ. வகுப்புகட்கு கணிதத்தில் குறைவுள்ள மாணவர்க்கு பாடீகணிதம், 8-ம் மனக்கணிதம், உயர்தர எண்கணிதம், சயன்ஸ் வகுப்பு மாணவர்க்கு மேற்படி கணிதங்களுடன் அக்ஷர கணிதம் பகுதி 1. 2, உயர்தர அக்ஷர கணிதம் என்னும் நூல்கள் மிகவும் ஏற்றவை. விசேட சித்திக்கு உத்தரவாதம் பயிலுங்கள்.

பிரசுரம்: வடலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை.

## புதிய பாக். வெளி மந்திரி

ராவல்பிண்டி, ஜூலை 21

43 வயதான வழக்கறிஞரும், அட்டோர்னி ஜெனரலும், அரசியல் கட்சி எதிலும் இல்லாமலிருந்தவருமான திரு. ஷெரிபுதீன், பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரியாக நேற்றுப் பதவியேற்ருர்.

முன்னுள் வெளி மந்திரி பூட்டொ சவூதி அரேபியாவில் இப்பொழுது ஓய்வெடுத்து வருகிருர்.

## வானொலி

### கொழும்பு

**வெள்ளி 22-7-66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**844 மீற்றர் & 61 மீற்றர்**

6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**844 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

**844 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்திநெறி—சைவசஞ்சிகை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 தேர்ந்தஇசை, 10-00 நேயர் விருப்பம்.

## பிரிட்டனின் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தபால், டெலிபோன் கட்டண உயர்வு ஆகியனவும் இதிலடங்கும்.

திரு, வில்ஸன் ஒலிபரப்பில் பேசியபோது பிரிட்டன் தனது பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் திறன் பெற்றிருக்கிறது என்ருர்.

வில்ஸனின் அறிவிப்பைத் தொடர்ந்து லண்டன் வெளிநாட்டு மார்க்கெட்டில் ஸ்டர்லிங்கின் நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டது. அமெரிக்கா, இதைக் கடும் நடவடிக்கையென வருணித்த போதிலும் அதை வரவேற்றது.

**பிரௌன் ராஜினுமா**

பிரிட்டிஷ் புதிய பிரதமரும், பொருளாதார மந்திரியுமான திரு பிரௌண் இந்த நடவடிக்கைகளை யடுத்து ராஜினுமாச்செய்ய முன்வந்தார். ஆனுல் பிரதமருடன் பேசியபின் அவர் தனது முடிவை மாற்றிக்கொண்டு விட்டார். நெருக்கடியான தருணத்தில் மந்திரி சபையிலிருந்து நாட்டுக்கு உதவி செய்ய விரும்புவதால் திரு கிரௌன் பின்பு கூறிஞர்.

தொழிற்கட்சி அங்கத்தினர்கள் சிலர் இந்த முடிவை ஆட்சேபித்தனர், ராஜினுமாச் செய்யுமாறு கன்சர்வேட்டிவ்கள் கோரினர். ஆனுல் பொதுவாக விலை சிக்கனத்திட்டம் வரவேற்கப்பட்டது, சம்பள உயர்வு இல்லாதது குறித்து பல தொழிற்சங்கங்கள் கண்டனம் தெரிவித்தன.


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். – பத்மினி
நடித்த
**காட்டு ரோஜா**

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
முத்துராமன் - ராஜஸ்ரீ
நடித்த
**அம்மா எங்கே!**


# விளம்பரம்

## வேலைவாய்ப்பு

மாணவ ஆசிரியருக்கான விண்ணப்பப் பத்திரம் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

**வர்த்தகக் கலாசாலை**

230, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம் 681

## பொதுக்கலைத் தகுதிப் பரீட்சை வகுப்புகள்

சகல பாடங்களுக்கான வகுப்புகள் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன. தயவுசெய்து முன்னதாகவே விண்ணப்பம் செய்து கொள்ளுங்கள்.

திருமதி எஸ். நடராசா
செல்வி எம். வை. முத்தையா
மே/பா,
12, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம் 676

## யாழ்ப்பாணக் கல்லூரி

**பட்டதாரி மாணவா பகுதி**

பொ. க. த. (G. A. Q.), பொ. அ, த, (G. S. Q.) வகுப்புகளுக்குச் சேர்.

செப்டம்பா — ஒக்டோபர் மாதங்களில் ஆரம்பிக்கவிருக்கும் மேற்படி வகுப்புகளுக்குச் சேரவிரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. தேவைப்பட்ட துறைக்கேற்ப க. பொ. த. (சா. த.) பரீட்சையில் (G, C. E. (O. L.) சித்திகளுடன், உயர்தராதரப் பரீடசை அல்லது க. பொ. த. (உ. த') பத்திரப் பரீட்சையில் G. C. E. (Ad. L.) ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியெய்தியவர்கள்எல்லோரும் விண்ணப்பிக்கலாம்.

முத்திரை ஒட்டப்பட்ட தம விலாசமெழுதிய நீண்ட தபாலுறை அனுப்புபவர்களுக்கு விண்ணப்பப் பத்திரமும் இதர தகவல்களும் அனுப்பி வைக்கப்படும்.

பதிவாளர்
வட்டுக்கோட்டை. 680

## மனேஜர் தேவை

கோண்டாவில் ப, நோ. கூ. சங்கத்துக்கு 1-8-66 தொடக்கம் மனேஜர் தேவை.

பின்வரும் தகுதியுடையவர்கள் 26-7-66இல் கிடைக்கத்தக்கதாக தலைவர் ப. நோ. கூ. சங்கம் கோண்டாவில் என்ற முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

1 J. S. C. க்கு குறையாத கல்வித்தராதரம்,

2 வயது 25—40.

3 வியாபார அனுபவமுடையவரும் கூட்டுறவுப் பயிற்சியும் விரும்பத்தக்கது.

பிணை ரொக்கம் ரூபா 1000. ஆதனம் ரூபா 2000, சம்பளம் ரூபா 100 ஆரம்பம். 683

## தேவை

பன்னைக்கண்டிப் பயிர்ச் செய்கைக்குழு, பரந்தனுக்கு ஓர் "கணக்காளர்-இலிகிதர்" தேவை. விண்ணப்பிப்போர் நாங்கள் எதிர்பார்க்கும் வேதனத்தையும், தங்கள் தராதரத்தையும் வயதையும் குறித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் இரணைமடு மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மேற்பார்த்து "தலைவர். பன்னைக்கண்டிப்பயிர்ச் செய்கைக்குழு, 3-ம் வாய்க்கால், பரந்தன்" என விலாசமிடப்பெற்று 15-8-66-க்கு முன் அனுப்பப்படல் வேண்டும். 682


**REGAL—JAFFNA**
NOW SHOWING
Kerwin Mathews
in
**Panic In Bangkog**
(Cinmeascope - Color)

**4-வது வெற்றி வாரம்!**
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
பி. ப. 2, 6, 9-30 மணி

ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்......எதற்கோ அழுதாள். ஆனுல் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.

மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின்! சிறு கதைதான்



**ஜெயலலிதா - ஸ்ரீகாந்த்**
மற்றும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
**"வெண்ணிற ஆடை"**
(ஈஸ்ட்மன்கலர்)
இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

கோவில் கும்பாபிஷேகங்களுக்கு
தேவையான
**அஷ்டபந்தன மருந்து**

★ கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
★ திருமண வைபவங்கள்
★ புதுமனைப் பிரவேசம்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளாவு சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனுதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும்
மற்றும்
சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

★ மயில் மார்க் சந்தன வில்லைகள்
★ சுகந்த சந்தனப் பவுடர்
★ பச்சை சந்தனம்
(உடன் யந்திரத்திஞல் அரைத்தது)

எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனுதிகள் வியாபார )

53, காங்கேசன்துறை வீதி,
பெரியகடை யாழ்ப்பாணம்.
போன்: 541, 7068

"பாலேந்திரா பில்டிங்"
160, செட்டியார் தெரு
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் புதிய பொதுஜனபாதுகாப்புசட்டம் இயற்றப்படும்

## நாடெங்கும் கிளர்ச்சிகளை தீவிரமாக தடுக்க முதல் மந்திரிகள் முடிவு

### பெருமளவு சட்டமீறல், நேரடி நடவடிக்கைக்கு ஏற்பாடாம்!

புதுடில்லி, ஜூலை 21

இந்தியாவில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை செம்மையான முறையில் அமுல் நடத்தும் பொருட்டு பொதுஜனப் பாதுகாப்புச்சட்டம் ஒன்று இயற்றப்படவிருக்கிறது. தற்போது அமுலிலுள்ள சட்டங்கள் சட்டம் ஒழுங்கை கட்டுப்படுத்துவதற்குப் போதுமான முறையில் இல்லாததே இதற்குக் காரணம். உள்நாட்டுமந்திரி நந்தா தலைமையில் ராஜீயமுதன்மந்திரிகள் புதுடில்லியில் இந்த முடிவை மேற்கொண்டார்கள்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து முதல்மந்திரிகள் நேற்று ஆராய்ந்தார்கள். ரயில்வேகளுக்கும், ரயில்வேசொத்துக்களுக்கும் ஏற்படும் அபாயங்கள், நாடெங்கிலும் தேர்தலுக்கு முன் அரசியல் கட்சிகளால் ஏற்பட்டுவரும் 'பந்த்' நடவடிக்கைகள் ஆகியன தீவிரமாக விவாதிக்கப்பட்டன.

தேர்தலுக்கு முன்னைய பிரச்னைகளைச் சமாளிக்க தற்போதைய சட்டம் போதுமானதல்லவென்றும், எனவே பொதுஜன பாதுகாப்பு சட்டம் ஒன்றை இயற்றவேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது.

திரு. நந்தா கூட்டத்தில் பேசியபோது நாட்டுக்கு வெளிஅபாயம் முன்னையவிட அதிகமாக இப்போது இருக்கும் சமயத்தில், உள்நாட்டுப் பாதுகாப்பு முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும், போக்குவரத்து தகவல் தொடர்பு ஆகியன சீராக இயங்கவேண்டியது வெகுமுக்கியம் என்றும் ரயில்கள், ரயில்வே சொத்துக்கள், பிரயாணிகள் ஆகியவற்றைப் பாதுகாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்றும் கூறினர்.

"பெரும் எடுப்பில் சட்டத்தை மீறுவது குறித்தும் நேரடி நடவடிக்கைகள் குறித்தும் நம்பகமான செய்திகள் கிடைத்திருக்கின்றன. இடதுசாரி, வலதுசாரி கம்யூனிஸ்டுகளும், சம்யுத்த சோஷலிஸ்டுகளும் இதற்கான தீவிர திட்டங்களுடன் செயல்படுகிறார்கள், அரசியல் கட்சிகள் ஜனநாயக முறையில் மக்களைத் திருப்புவதற்குப் பதில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுகின்றன" என்றும் திரு. நந்தா கூறினர்.

ரயில்வே மந்திரி பட்டீல் ரயில்பிரயாணிகளின் பத்திரம், ரயில்வே சொத்து ஆகியவற்றில் ராஜ்ய அரசாங்கங்கள் விடுமுறைபாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கூறினர். முதல்மந்திரிகள் ராஜயங்களில் ஏற்பட்டுவரும் 'பந்த்' கிளர்ச்சி நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

## காமராஜர் கிழக்குலகம் செல்கிருர்!

புதுடில்லி, ஜூலை 21

காங்கிரஸ் தலைவர் காமராஜர் நாளை ரஷ்யாவுக்கும், இதர கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும்சுற்றுப்பிரயாணத்தைஆரம்பித்தார்.

ரஷ்ய அரசாங்கமும், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியும் விடுத்த அழைப்பின் பேரில் செல்லும் காமராஜர், சோவியத்யூனியனில் 9 நாள் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லேவேகியா, பல்கேரியா, ஹங்கேரி, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளின் அரசாங்க அழைப்பின் பேரில் இந்த நாடுகளுக்கும் காமராஜர் செல்கிருர். அடுத்தமாதம் 12-ம் திகதி அவர் இந்தியா திரும்புவார்.

உலக நாடுகளில் பிரபல்யம் பெற்றுள்ள காமராஜர், இதுவரை இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டுக்கும் சென்றதில்லை. ஆசியக் கண்டத்தின் எல்லைக்கு வெளியே அவர் செல்வது இதுதான் முதல்தடவையாகும்.

## விண்வெளியில் நடந்தார்

கேப்கெனடி, ஜூலை 21

அமெரிக்க விண்வெளி வீரர் மேஜர் கொலின்ஸ் விண்வெளியில் 28 நிமிடம் நடந்தார். எரிபொருள் பற்றுக்குறை காரணமாக திட்டமிட்டபடி 50 நிமிடம் நடக்க இயலாமல்போய்விட்டது. மனிதன் வானவெளியில் நடப்பது இது 4-வது தடவை.

4 மாதங்களுக்கு முன் செலுத்தப்பட்ட ராக்கெட் ஒன்றைச் சந்தித்து, வானவெளி வீரர்கள் அதனுடன் சென்றார்கள்.

## நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி

பஞ்சிம், ஜூலை 21

கோவா மந்திரி சபைமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. 31 மாதத்திற்குமுன் திரு. பந்தோட்கர் மந்திரிசபை பதவிக்குவந்தபின், எதிர்க்கட்சிளுல் கொண்டுவரப்பட்ட 3-வது நம்பிக்கையில்லாத்தீர்மானம் இதுவாகும்.

டில்லிசந்திப்புக்கு

## நியூயோர்க்கில் நிகழ்ச்சி நிரல்

நியூயோர்க், ஜூலை 21

ஸ்ரீமதி இந்திராகாந்தி, அதிபர் டிட்டோ, அதிபர் நாஸர் ஆகியோர் வருகிற அக்டோபர் மாதம் புதுடில்லியில் சந்திப்பதற்கான நிகழ்ச்சி நிரல் மூன்றுதேச வெளிமந்திரிகளினுல் நியூயோர்க்கில் தயாரிக்கப்படும்.

வருகிற செப்டம் மாதம் ஐ. நா. பொதுச்சபைக்கூட்டத்திற்கு இந்த வெளிமந்திரிகளும் நியூயோர்க் வருகிருர்கள்.

## டில்லியில் மல்யுத்தப் போட்டி

புதுடில்லி, ஜூலை 21

அடுத்த ஆண்டு நவம்பர் 12-ம் திகதி புதுடில்லியில் உலக மல்யுத்தப் போட்டிகள் ஆரம்பமாகும்.

புதுடில்லி

## தென்னட்டு ஆலயங்களுக்கு தேவாரப் பாடல்கள்

### பக்திபரவசத்துடன் பக்தவத்சலம் வழங்கினர்

புதுடில்லி, ஜூலை 21

புதுடில்லியிலுள்ள தென்னட்டு ஆலயங்களுக்கு பக்திப்பாடல்கள் கொண்ட இசைத்தட்டுகளை முதல் மந்திரி பக்தவத்சலம் பக்தியுடன் வழங்கினர்.

இதுசம்பந்தமான வைபவம் டில்லி சரோஜினி நகர் விநாயகராலயத்தில் நடைபெற்றது.

தேவாரப்பாடல் இசைத்தட்டுகளின் 9 தொகுப்புகளையும் இன்னமுதம் என்ற நூலையும் 3 ஆலயங்களுக்கும் இதர மடாலயங்களுக்கும் முதல்வர் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியின்போது தேவாரம், திருப்புகழ், திருவாசகம்ஆகியன இசைக்கப்பட்டது.

திரு. பக்தவத்சலம் பேசுகையில், தென்னட்டில் ஆஸ்திக இயக்கம் வளர்ச்சி பெற்றுவருகிறது எனக்கூறினர்.

வில்ஸன் அறிவிப்பு

## பிரிட்டனின் புதிய சிக்கன திட்டம்

### உதவிப்பிரதமர் ராஜிஞமாவை வாபஸ் பெற்றுர்!

லண்டன், ஜூலை 21

பிரிட்டிஷ் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கப் புதிய நடவடிக்கைகளைப் பிரதமர் வில்ஸன் நேற்று பார்லிமெண்டில் அறிவித்தார். இந்த நடவடிக்கைகளை ஆட்சேபித்து முதலில் ராஜிஞமாசெய்ய முன்வந்த உதவிப் பிரதமர் திரு. ஜோர்ஜ் பிரௌண், தனது மனதை மாற்றிக்கொண்டுவிட்டார்.

சம்பளங்கள். விலைவாசிகள் ஆகியவற்றை அடுத்த 6 மாதங்களுக்குள் இதே நிலையில் வைத்திருப்பது என்பதும், அடுத்த 6 மாதங்களுக்குத் தீவிர கட்டுத்திட்டத்தை ஏற்படுத்துவது என்பதும் திரு வில்ஸனின் சிக்கன அம்சங்களில் ஒன்று. அதாவது குறிப்பிட்ட கால அளவுக்குச் சம்பள உயர்வு இருக்காது.

அடுத்த 12 மாதங்களுக்கு கம்பனிகளின் லாப ஈவு குறைக்கப்படவேண்டும். கொள்முதல் வரியும், விற்பனை வரிக்கு 10 சதவிகித மேலதிக வரியும் ஒரு வருடத்துக்கு விதிக்கப்படும்

வெளிநாடுகளில் ராணுவ சிவில் செலவுகள், தனிப்பட்ட செலவுகள், வெளிநாட்டு உதவி ஆகியவற்றில் 15 கோடி பவுண் குறைக்கப்படும்.

இவ்வித நடவடிக்கைகள் மூலம் 50 கோடி பவுண் மிச்சம் ஏற்படுமென எதிர்பார்ப்பதாகப் பிரதமர் கூறினர்.

இந்தோனேஷியாவின் மலேஸிய எதிர்ப்புக் [illegible] முடிவுற்றவுடன் அப்பகுதியிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளை குறைப்பது மூலம் கணிசமான மிச்சம் ஏற்படுமென்றும், ஜெர்மனியிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளுக்கு, ஜெர்மனியின் பங்குப் பணத்தை அதிகரிப்பதன் மூலமும் மேலும் கணிசமான மிச்சம் கிடைக்கும் என வில்ஸன் கூறினர்.

ஸ்டர்லிங் பகுதிகளுக்கு வெளியே பிரயாணம்செய்தலைக் கட்டுப்படுத்துதல்,

(2-ம் பக்கம் பார்க்க)

## உலக கப்

லண்டன், ஜூலை 21

நேற்றைய உலக உதைபந்தாட்டக் கால் இறுதிப் போட்டிகளின் முடிவு வருமாறு:

இங்கிலாந்து 2-0 கோல்களால் பிரான்ஸைத் தோற்கடித்தது.

மேற்கு ஜெர்மனி 2-1 கோல்களால ஸ்பெயினைத் தோற்கடித்தது.

ஹங்கேரி 3-1 கோல்களால் பல்கேரியாவைத் தோற்கடித்தது.

ரஷ்யா 2-1 கோல்களால் சிலியைத் தோற்கடித்தது. (பிரேஸில் கால் இறுதிப் போட்டியில் இடம்பெறவில்லை.)

## கைதிகளைப் பற்றி பேச அமெரிக்கா தயார்

### வடவியட்னுமுக்கு அதிபர் ஜோன்ஸன் அறிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 21

கைதிகளை நடத்தும்விதம் குறித்து வடவியட்னுமுடன் பேச்சு நடத்த அமெரிக்கா தயாராய் இருப்பதாக ஜனுதிபதி ஜொன்ஸன் நேற்று நிருபர்கள் மகாநாட்டில் அறிவித்தார்.

இந்தக் கைதிகள் யுத்த குற்றவாளிகள் அல்ல என்றும், கட்டளைகளுக்குட்பட்டு ராணுவ இலக்குகள் மீது குண்டு வீசும் தங்கள் கடமைகளையே செய்தார்கள்என்றும் அவர் கூறினர்.

இவர்கள் யுத்த குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட்டால், அமெரிக்கா பதிலடி கொடுக்கத் தயங்காது என்றும் அதிபர் கூறினர்.

வடவியட்னும் மீதான குண்டு வீச்சு நிறுத்தப்படுமா எனக்கேட்கப்பட்டதற்கு, "சமாதானப்பேச்சு நடத்த வடவியட்னும்உடன்பட்ட சிலமணி நேரத்திலேயே அமெரிக்காவும் அதில் கலந்துகொள்ள தயாராகிவிடும். எல்லா நாடுகளுக்கும் இது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நிபந்தனையற்ற முறையில் இப் பேச்சுக்கள் ஆரம்பமாகவேண்டும். ஆனல் தாக்குதல் நடைபெறும்போது கையை கட்டிக் கொண்டிருக்கும்படி அமெரிக்கப் படைகளுக்கு நான் உத்தரவிடமுடியாது" என்ருர் ஜோன்ஸன்.

அதே சமயம் மாஸ்கோ ரேடியோ, நேற்றைய ஒலிபரப்பில் அமெரிக்க கைதிகள் யுத்த குற்றவாளிகள் என்ற வடவியட்னுமின் நிலையை ரஷ்யா ஆதரிக்கிறது எனக் கூறிற்று.

அமெரிக்காவின் சார்பாக கனடாவும் கைதிகள் பற்றி வடவியட்னுமுடன் தொடர்புகொண்டிருக்கிறது

இதற்கிடையில் பிரெஞ்சு அதிபர் டிகாலுக்கு அதிபர் ஹோசிமின் அனுப்பியுள்ளசெய்தியில் இறுதி வெற்றிவரை போராட வடவியட்னும் உறுதிகொண்டிருக்கிறது எனக் கூறியிருக்கிருர்.

அதிபர் டிகால் நேற்று விடுத்த அறிக்கையில் வியட்னும் பிரச்னை ஜெனிவா அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும் என்றும், ஆனல் வெளிநாட்டுத் துருப்புகள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் பல நகரங்களில் வியட்னும் சம்பந்தமாக அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நேற்று இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நம்மை ஏன் சிலர் வெறுக்கிறார்கள்? காரணம் நமக்கு உண்மையில் அவர்கள்பால் அன்பு இல்லாமைதான். நாம் அவர்களிடம் உண்மையில் அன்பு கொண்டால், அவர்களது அன்பும் தானாக நமக்குக்கிடைக்கும் அன்பின் சட்டம் இதுவே.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு | ஆடி மீ 6 (22-7-66)


## பல்கலைக் கழக சுயாட்சி

ஜனநாயக நாடுகளில் பல்கலைக் கழகங்கள் சுயாட்சி முறையிலேயே நடந்து வருகின்றன. சமீப காலங்களில் அரசாங்கங்கள் பல்கலைக் கழகங்களுக்குகூடிய நிதிஉதவி புரிய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்ட போதிலும் பல்கலைக்கழகங்களின் சுயாட்சியை பாதிக்காத முறையிலேயே நிதியுதவி வழங்குதலுக்கு ஒழுங்குசெய்திருக்கின்றனர். சாம்ராஜ்ய நாடுகளான பிரிட்டன், இந்தியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் அரசாங்கத்திற்கும் பல்கலைக் கழகங்களுக்குமிடையிலே நிதிவழங்குதல் போன்ற தொடர்புகளை சமாளிப்பதற்காக பல்கலைக் கழக மான்ய சபை (பல்கலைக் கழக கிரண்ட் கமிஷன்) ஸ்தாபிக்கப்பட்டு நடைமுறையில் செயல்பட்டு வருகின்றது இச்சபை அரசாங்கத்திற்கும் பல்கலைக்கழகங்களுக்குமிடையில் நேரடி விசாரணைகள் செய்து அரசாங்கத்தின் தேவைகளையும் பல்கலைக் கழகத்தின் முயற்சிகளையும் சீர்தூக்கி சமாளித்து நிதியுதவித்தொகையைத் தீர்மானித்து மற்றும் தொடர்பான விஷயங்களில் இணைப்பை ஏற்படுத்தும் சபையாக கடமையாற்றி வருகின்றது இந்த சபைகளுக்கு கொடுத்திருக்கும் அதிகாரங்களில் பல்கலைக் கழக சுவாதினத்தை எதுவிதமும் பாதிக்காத முறையில் சட்ட விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஜனநாயக ஆட்சிக்கு பல்கலைக் கழக சுயாதீனம் ஓர் இன்றியமையாத அங்கமாகவே கருதப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கையில் தற்போதும் சமீபகாலத்திலும் பல்கலைக் கழகத்தின் சுயாதீனத்தை கட்டுப்படுத்த வேண்டுமென்ற கருத்து நிலவிவருகின்றது. இத்தகைய அபிப்பிராயம் சர்வாதிகார ஆட்சிக்கு அடிப்படையான கொள்கையென மக்கள் அஞ்சவேண்டியிருக்கின்றது. கல்விமந்திரி பாராளுமன்றத்தில் இம்மாதம் 18-ம் திகதி சமர்ப்பித்த உயர் கல்வி மசோதா பல்கலைக்கழகத்தின் சுவாதீனத்தை பாதித்து கட்டுப்படுத்தி ஒரு விதத்தில் ஒழிக்கின்றது. இதுவரையும் இலங்கை பல்கலைக் கழகம் வித்தியோதய பல்கலைக் கழகம் வித்தியலங்கார பல்கலைக் கழகம் போன்றவை தனித்தனி பாராளுமன்ற சட்டத்தில்கீழ் இயங்கி வந்தன. தற்போது சமர்ப்பிக்கப்பட்ட உயர்கல்வி மசோதாவின்படி இலங்கையில் இயங்கிவரும் மூன்று பல்கலைக் கழகங்களும் வருங்காலத்தில் ஸ்தாபிக்கப்படும் பல்கலைக் கழகங்களும் கனிஷ்டபல்கலைக்கழகங்களும் தொழில் நுட்ப கல்லூரிகள் சகலதும் கல்வி மந்திரியின் விரிவான அதிகாரங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமையவேண்டும் இவற்றையெல்லாம் கட்டுப்படுத்தி ஆளுதற்கு ஆலோசனை சபையாக மந்திரியால் முழுதும் தெரியப்பட்ட ஓர் உயர்தர கல்வி தேசிய சபை ஸ்தாபிக்கப்பட மசோதாவில் இடம்வகுக்கப்பட்டுள்ளது.

இத்தேசிய சபைக்கு மற்றும் சாம்ராஜ்ய நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக நிதிமான்ய சபைகளுக்கு விதிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு மேலதிகமாகவிருந்த அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஆகையினால் பாராளுமன்றம் உயர் கல்வி மசோதாவை ஏற்றுக்கொண்டால் கல்விமந்திரிக்கும்கல்விமந்திரியால் முழுதும் தெரிவுசெய்யப்பட்ட உயர்தரக்கல்வி தேசியசபைக்கும் ஓரளவு சர்வாதிகாரம் இலங்கை பல்கலைக்கழகங்களையும் மற்றும் உயர்தரக்கல்வி ஸ்தாபனங்களையும் கட்டுப்படுத்தியாளக்கொடுப்பதாகவே பொதுமக்கள் கருத வேண்டியிருக்கின்றது. இவ்வித மசோதா பல்கலைக்கழகத்தின் சுயாதீனத்தைக் கட்டுப்படுத்தும் மசோதாவாக இருக்கின்றது. இதை ஜனநாயகமுறையில் பல்கலைக் கழகங்களின் சுயாட்சியை அனுஷ்டிக்கும் கொள்கைக்கு முழு முரணாக இருக்கிறதென்று பொதுமக்கள் எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. பல்கலைக் கழகங்களுக்கு சுயாதீனம் ஒழிந்தால் எம்நாட்டில் உயர்தரக்கல்வி அடக்குமுறையான சர்வாதிகார ஆட்சியில் சீக்கிரத்தில் அமிழ்ந்திவிடும்.

தேசிய அரசாங்கம் இந்த நிர்ப்பந்தத்திற்கு இடம் கொடுக்குமா? இந்த மசோதாவைத் திருத்தி அமைத்து ஜனநாயக ஆட்சிக்கு முரணில்லாமல் பல்கலைக்கழகங்களின் சுயாதீனத்தையும ஒழிக்காமல் அரசாங்கத்திற்கும் பல்கலைக்கழகங்களுக்கும் ஏற்றதொடர்பை விதிக்க முயல்வதே அவர்களின் கடமையாகும்.

சாம்ராஜ்ய நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றி ஒரு பல்கலைக்கழக மான்யசபை ஸ்தாபித்தால் போதாதோ? இங்கிலாந்தில் சரித்திரப் பிரசித்திவாய்ந்த13பல்கலைக் கழகங்களை அரசாங்கம் நிதிஉதவி புரிந்து நாட்டின் தேவைகளுக்கேற்ற முறையில் இச்சபையின் மூலம் நடாத்திவருகின்றது. இந்தியாவில் கீர்த்தி வாய்ந்த பல்கலைக்கழகங்களும் மற்றும் உயர்தர கல்விஸ்தாபனங்களும் ஏறக்குறைய 54 ஸ்தாபனங்களை இந்திய அரசாங்கம் தேசிய முன்னேற்றத்திற்கு ஏற்றமுறையில் மான்யசபையின் ஆலோசனையுடன் நடத்தி வருவதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இத்தகைய முறைகள் இருக்கையில் இலங்கையில் அரசாங்கம் தேவையற்ற அவசரத்துடன் பல்கலைக்கழகத்தின் சுயாதீனத்தைக் கட்டுப்படுத்துவது ஏன்? கல்விமந்திரியால் தெரியப்படும் உயர்தர கல்விசபைக்கும் பல்கலைக்கழகத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அளிப்பது நிச்சயமாக கல்வியைப் பாதிக்கும். பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்தைத் தடுக்கும். தேசிய முன்னேற்றம் ஜனநாயக முறையிலிருந்து விலகுவதற்கு அடிப்படைக் காரணமாகவும் அமையும். தேசிய அரசாங்கம் இத்தகைய முரண்பாடுகளை அவதானித்து இம்மசோதாவை பின்போட்டு நல்ல திருத்தங்கள் செய்வது அவசியமாகும்.

ஆசிரியருக்குக் கடிதம்

## தமிழில் சுருக்கெழுத்து

''ஈழநாடு'' 14-7-66-ம் திகதிப் பதிப்பில் ''தமிழில் சுருக்கெழுத்து'' என்ற தலைப்பில் திரு. வே. வா. வேலுப்பிள்ளை எழுதியிருந்த தவற்றைக் கருத்துடன் படித்தேன். திரு. வேலுப்பிள்ளை எழுதிய அபிப்பிராயங்களில் சில ஒரு தலைப்பட்சமானவை. இது வருந்தத்தக்கது. பிட்மன் தமிழ்ச் சுருக்கெழுத்து முறையைப் புகழ்ந்தும் சுப்பிரமணியம் தமிழ்ச் சுருக்கெழுத்து முறையை இகழ்ந்தும் அவர் எழுதிய குறிப்புக்களை உண்மையான சுருக் கெழுத்தாளர்கள் வரவேற்பார்கள் என்று நான் கருதவில்லை.

பிட்மன் தமிழ்ச் சுருக்கெழுத்து முறையில் நிமிடத்துக்கு எண்பது தொண்ணூறு சொற்களும் சுப்பிரமணியம் முறையில் ஐம்பது அறுபது சொற்களும் மட்டுமே எழுதலாம் என்று திரு. வேலுப்பிள்ளை கூறுவதில் ஒரு பகுதியைப் பலமாக ஆட்சேபிக்க வேண்டி இருக்கிறது. சுப்பிரமணியம் தமிழ்ச் சுருக்கெழுத்து முறையில் ஐம்பது அறுபது வார்த்தைகள் மட்டுமே ஒரு நிமிடத்திற்கு எழுதமுடியும் என்று திரு: வேலுப்பிள்ளை எப்படிக் கூற முடியும்? யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப பாடசாலையில் சுப்பிரமணியம் தமிழ்ச் சுருக்கெழுத்து முறையைப் பயின்ற மாணவர்களில்பலர் அண்மைக் காலங்களில் நிமிடம் நூறு வார்த்தைகள் வேகத்தில் பரீட்சை எழுதிச் சித்தியடைந் துள்ளார்கள். இந்தியாவில் 59-ம் ஆண்டில் முதன் முதலாகப் பல மொழிச் சுருக்கெழுத்துக்களிலும் அதி உயர்ந்த வேகத்தினைப் பரிசோதிக்கப் போட்டிப் பரீட்சைகள் வைக்கப்பட்ட போது, வேலூர் பொலிஸ் அலுவலகத்தில் கடமையாற்றிய திரு ஜீ. சுப்பிரமணியம் என்பவர் நிமிடம் ஒன்றிற்கு நூற்றி இருபது சொற்கள் வேகம் எழுதி தமிழ்ச் சுருக்கெழுத்திற்கான பரிசினைப் பெற்றார். இலங்கைப் பாராளுமன்றத்திலும் செனற் சபையிலும் கடமை பார்க்கும் தமிழ் அறிக்கையாளர்கள் அத்தனைபேரும் இன்று சுப்பிரமணியம் தமிழ்ச் சுருக்கெழுத்து முறையைப் பயின்றவர்களாகவே இருக்கிறார்கள்.

பிட்மன் ஆங்கில சுருக்கெழுத்து முறையைத் தழுவித் தமிழுக்குப் பல சுருக்கெழுத்து முறைகள் ஆக்கப் பெற்றிருக்கின்றன. இவற்றுள் ஸ்ரீநிவாசராவ் என்பவரால் ஆக்கப்பெற்றுள்ள பிட்மன் தமிழ்ச் சுருக்கெழுத்து முறையே அதிகம் பிரபல்யம் அடைந்துள்ளது. அண்மையில் தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. க. முருகேசு என்பவரும் பிட்மன் ஆங்கில சுருக்கெழுத்து முறையைத் தழுவித் தமிழுக்குப் புதியதொரு தமிழ்ச் சுருக்கெழுத்து முறையைக் கண்டுபிடித்துள்ளதாகக் கூறப்படுகிறது. பிட்மன் தமிழ்ச் சுருக்கெழுத்து முறைகள் எல்லாவற்றையும் ஒப்பிட்டு அவற்றின் சிறப்பை நோக்கின் எல்லா பிட்மன் தமிழ்ச் சுருக்கெழுத்து முறைகளும் மேம்பாடடையவில்லை என்பது புலனாகும். சிலர் பிட்மனின் பெயரை மட்டும் உபயோகித்து மற்றைய தமிழ்ச் சுருக்கெழுத்து முறைகளை மட்டம் தட்ட முயல்கிறார்கள். ஸ்ரீநிவாசராவினால் ஆக்கப்பட்ட பிட்மன் தமிழ்ச் சுருக்கெழுத்து முறை இலங்கையில் அதிகம் பரவாததற்குக் காரணம் அந்த முறையில் உள்ள குறைகள் அல்ல. அரைகுறைப் படிப்புடன் சிலர் அக்கலையைப் பரப்பப் புறப்பட்டதே காரணம். இல்லாதுவிட்டால் பிட்மன் தமிழ்ச் சுருக்கெழுத்து முறை ஈழத்தில் வேரூன்றி இருக்க முடியாதா? சிலர் பிட்மன் தமிழ்ச் சுருக்கெழுத்து முறை இலங்கையில் பரவாததற்குச் சுப்பிரமணியம் சுருக்கெழுத்து முறை மீது பழியைப் போடுகிறார்கள். இது நியாயமல்ல.

செ. நடராசா.
வெள்ளவத்தை.

'அராலிக்கு

## ஒரு கிராமசபை வேண்டும்'

அராலி, வியான்மு
அராலி நலஉரிமைச் சங்க விசேட பொதுக்கூட்டம் ஒன்று அராலிதெற்கு சமூக வதி சனசமூகக்கட்டிடத்தில் சங்கத்தலைவர் திரு கே சுப்பிரமணியம் ஜே பி தலைமையில் கூடியபொழுது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

அராலிக்கு ஓர். ஊர்மன்றம்வேண்டி அராலி மக்கள் கைச்சாத்திட்டு ஸ்தல ஸ்தாபன மந்திரிக்கு சென்ற மாதம் 30-ந் திகதி சமர்ப்பித்த மகஜர் பலனளிக்கும் நிலையை அடைந்துவிட்ட தென அறிந்தசிலர் சிலநாட்களுக்குமுன் கூடி அராலிக் கிராமத்துக்குத் தனித்து ஓர் கிராமசபை வேண்டியதில்லை என தாம் தீர்மானித்ததாக பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டிருந்தனர். இது வேதனைக்குரியது. இவ் விஷயத்தை தொடர்புள்ள மந்திரிக்கும், பத்திரிகைகளுக்கும் அறிவிப்பதற்குதலைவருக்கு இச்சபை அதிகாரமளிக்கிறது.''

அராலிக்கிராமசபைவிரைவில் ஸ்தாபிக்கப்படுவதற்கும் சிலரின் பிரசாரங்களை அவ்வப்போது எதிர்த்து விளக்கம் தெரிவிப்பதற்குப் பின்வருவோரைக் கொண்ட ஓர்குழுஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டது. திருவாளர்கள்: கே சுப்பிரமணியம் ஜே, பி. தலைவர், க நாகலிங்கம் (நுண்தொழில் கல்லூரி அதிபர்), வி நாகலிங்கம், வே கணபதிப்பிள்ளை, ம நட்சத்திரம், இக்குழுவிற்கு சங்க இணைச் செயலாளர் திரு வி வி மூர்த்தி செயலாளராகக்கடமையாற்றுவார்.

### பாஷையூரில் சிரமதானப்பணி

யாழ்ப்பாணம், வெள்ளி.
பாஷையூர் துறைமுகக் கால்வாயை ஆழமாக்கும் சிரமதானப்பணி அவ்வூர் மக்கள் முன்னேற்றச்சங்கத்தினராலும். அர்ச். அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தினராலும் தொடர்ந்து விறுவிறுப்பாக செயல்பட்டு வருகிறது.

# ஐயாறன் எழுதுகிறார்

சென்னையிலிருந்து கி. வா. ஜ. மணிவிழா அழைப்பிதழ் நேற்று தபாலில் கிடைத்தது! விழா நடந்தது 10-ம் திகதி. அந்த அழைப்பை 4-ந் திகதி சென்னையில் 'போஸ்ட்' செய்திருக்கிறார்கள். தபால் முத்திரை இதைத் தெரிவித்தது. ஆனால் இங்கு அக்கடிதம் கிடைத்தது 17 நாட்கள் கழித்துத்தான்!

யாழ்ப்பாணத்திலிருந்து ஓரன்பர் சென்னைக்குச் சென்று அவ்விழாவில் கலந்துகொண்டு, அங்கு நடந்த வைபவங்களையெல்லாம் வர்ணித்துவிட்டு, அழைப்பிதழ் கிடைத்ததா? என்று கேட்டார். இல்லை என்றேன். நேரில் தாமேதான் 'போஸ்ட்' செய்ததாகச் சொன்னார்! ஏதோ தபாலில் தவறிவிட்டதுபோலுமென்று சமாதானம்செய்து கொண்டோம்.

ஆனால் அது தவறவில்லை. 17 நாட்கள் கழித்து பத்திரமாக வந்துசேர்ந்துவிட்டது! வைபவம் முடிந்து 10 நாட்களுக்கு மேலான பின்பாவது, தபாலைச் சேர்த்ததற்காக, இருதேச தபால்காரர்களுக்கும் நமது நன்றி உரித்தாகுக! விழாவுக்கு முன் கிடைத்திருப்பின் ஒரு வாழ்த்துத் தந்தி அடித்திருக்கலாம். இனி என்ன செய்ய!

ஃ ஃ ஃ

லண்டனிலிருந்து சிலமணி நேரங்களில் இங்கு தபால் கிடைக்கமுடிகிறதாம்! ஆனால் பக்கத்திலுள்ள தமிழகத்திலிருந்து இங்குதபால் கிடைக்க ஏன் இரண்டு வாரங்களுக்கு மேலாக வேண்டும்? பெரியதோர் அக்கிரமமாகும்,

ஏன் இவ்வளவு தாமதமென்று விசாரித்தேன். ராமேச்வரம் பாதை வழியாகத்தான் தபால் செல்லுவதாயும், வாரத்தில் இரண்டே நாட்கள்தான் கப்பல் செல்லுவதாயும் சொன்னார்கள். அப்படியாயினும் மூன்றல்லது நான்கு நாட்களில் தபால்கிடைக்கவேண்டுமே! சென்னையிலிருந்து ராமேச்வரத்துக்கு இலங்கைத் தபால் மூடைகள் உடன்வந்து சேர்ந்துவிடுமாம் ராமேச்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு தபால்கள் வந்ததும், அங்கிருந்து ரயிலில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பரென்றும் எப்படியும் இவ்வளவு தாமதம் ஆகத் தேவையில்லையென்றும், அக்கடிதத்தை அனுப்பிவைத்தால் கொழும்பிலுள்ள ஜெனரல் தபாலாபீஸுக்கு அனுப்பி விசாரிக்கலாம் என்றும் யாழ்ப்பாண தபால் அதிகாரிதெரிவித்தார்.

காரணம் எதுவாயினும், இரு அரசாங்கங்களும்மனம் வைத்து ஒத்துழைப்பதாயின், முன்போல் ஒவ்வொரு நாளும் தபால் கிடைக்கும்படி செய்ய முடியும். 30 மைல் தூரம்தான் உள்ளது இக்கடல். ஒருவிசேஷமோட்டார்ப் படகை இரு அரசாங்கங்களும் ஒழுங்குசெய்து தபால்களை அதன்மூலம் அனுப்பி வைக்க ஒழுங்கு செய்ய முடியாதா? ஏதோ, எப்போது காற்றடித்த தென்ற சாக்குவைத்துக் கொண்டு தபால்களை வாரக் கணக்காகத் தவக்கம்செய்வது இரு அரசுகளுக்கும் பெருமை தராது.

இலங்கையின் ஒரே ஒரு அண்டைநாடு இந்தியாதான். அதனுடனும் கூட தபால் போக்குவரத்தை இப்படி தவக்கப்படுத்துவது

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டுச் செய்திகள்

## 'காங்கிரஸ் இல்லாமல் மந்திரி இல்லை'

—கக்கன்

திண்டுக்கல், ஜூலை 21

''தேர்தல் நிதி வசூல் செய்ய மந்திரியே வந்துவிட்டாரே என்று பலர் நினைக்கலாம். காங்கிரஸ் கட்சி இல்லாமல் மந்திரி இல்லை! அந்த மாபெரும் கட்சியால்தான் ஒட்டுரிமை கிடைத்தது. காங்கிரஸ் ஸ்தாபனம் சொன்னபடி செய்யும்'' என்று மந்திரி கக்கன் பேசுகையில் சொன்னார்.

திண்டுக்கல் தாலுகாவில் மந்திரி கக்கன் காங்கிரஸ் தேர்தல் நிதி வசூலை தொடக்கிவைத்துப்பேசுகையிலே இப்படிச்சொன்னார்.

''மனிதனுக்கு மானம் தான் பெரிது. கம்யூனிஸ்டுகளுக்கு அது பெரிதல்ல! தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்கவும் தயங்கமாட்டார்கள்'' என்றும் மந்திரி சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் சொன்னதாவது:—

இந்தநாட்டில் உருப்படியான எதிர்க்கட்சியில்லை. நாட்டில் நிலையான ஆட்சி ஏற்படவேண்டும். இல்லாவிட்டால் சிரமங்கள்தான் ஏற்படும். இதைப் பொதுமக்கள் உணரவேண்டும்.

ஃ ஃ ஃ

## சினிமா நடிகர் தி. மு. கா.வில் சேர்ந்தார்

சென்னை, ஜூலை 21

சினிமா நடிகர் கே. கண்ணன் திராவிட முன்னேற்றக்கழகத்தில் சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நடிகர் ஆனந்தன் கழகத்தில் சேர்ந்துள்ளார்.

ஃ ஃ ஃ

## 'கழகம் மக்கள் தயவில் வாழ்கிறது'

--நெடுஞ்செழியன்

சங்கரன்கோவில், ஜூலை 21

''கழகம் பணக்காரர்களுக்கோ, முதலாளிகளுக்கோ பயப்படவேண்டிய தேவையில்லை. கழகம் மக்கள் தயவில் வாழ்கிறது. காங்கிரஸ் பணக்காரர் தயவில் வாழ்கிறது''

சங்கரன் கோவில் காந்தி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தி. மு. க. தலைவர்களில் ஒருவரான திரு. நெடுஞ்செழியன் பேசுகையில் சொன்னார்.

ஃ ஃ ஃ

## சிவாஜியைப் பாராட்டினார் எம். ஜி. ஆர்.!

சேலம், ஜூலை 21

தனக்கும் ஒரு கொள்கையுண்டு; கட்சியுண்டு என்று பகிரங்கமாகத் தெரிவித்து காங்கிரஸில் சேர்ந்து கொண்ட, சினிமா நடிகர் சிவாஜி கணேசனை இங்கு நடைபெற்றதேர்தல் கூட்டத்தில் எம். ஜி ராமச்சந்திரன் பாராட்டினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தேர்தல் நிதி திரட்டுவதற்காக ராமச்சந்திரன் சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்துவருகின்றார்.

எம். ஜி. ராமச்சந்திரன் கூறியதாவது: என் தம்பி சிவாஜி கணேசன் காங்கிரஸின் தேர்தல் பிரசாரத்திற்காக கோவை மாவட்டத்திற்கு வரப்போவதாக அறிந்தேன். 'நாங்கள் கலைஞர்கள், பொதுச்சொத்து. எங்களுக்குக்கட்சி எதுவும் கிடையாது' என்று பல முறைசொல்லி வந்த சிவாஜி கணேசன், இப்போழுது வெளிப்படையாக, காங்கிரஸில் சேர்ந்துள்ளதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

## '1967-ல் கூட்டணி ஆட்சிவந்தே தீரும்'

--முஸ்லிம்லீக் தலைவர்

மதுரை, ஜூலை 21

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் 1967 தேர்தலில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஆட்சி ஏற்பட்டேதீரும் என்று முஸ்லிம் லீக்தலைவர் திரு. முகமது கோயா இங்கு நடைபெற்ற கூட்டத்தில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: தமிழ்நாட்டில் ஏற்கனவே திராவிட முன்னேற்றக்கழகமும், சுதந்திரக்கட்சியும், முஸ்லிம் லீக்கும் கூட்டணி அமைத்துள்ளன. இடதுசாரி பொதுவுடமைக் கட்சிகள்போன்ற மற்ற எதிர்க்கட்சிகளும் இக்கூட்டணியில் சேர வந்தால் ஏற்றுக்கொள்ளப்படும். இக் கூட்டணியால் காங்கிரஸ் தோல்வியடையும்.

## கூட்டுறவாளர் தினவிழா இன்று ஆரம்பம்

சங்கானை, வெள்ளி

வலிமேற்கு சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா இன்று ஆரம்பமாகிறது. சங்கானை வைரவர்கோவில் வீதியில் சமாச முதல்வர் திரு. க. கெங்காதரபிள்ளை தலைமையில் இன்று காலையில் விழாநிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். அதிகாலையிலும் பிற்பகலிலும் சைக்கிளோட்டப்போட்டிகளும். கிடுகு பின்னற்போட்டி, வெண்காயக்கூடு முடைதற்போட்டி, குண்டெறிதல் போட்டி, கயிறிழுத்தற் போட்டி ஆகியன இடம்பெறும்.

நாளை இறுதிநாள் நிகழ்ச்சிகள் திரு ஜே எம் சபாரத்தினம் தலைமையில் திருவாளர்கள் ஆர் இராசரத்தினம், வட்டுக்கோட்டை எம் பி அ அமிர்தலிங்கம், சங்கானைப் பட்டினசபைத் தலைவர் எஸ் கே திருச்சிற்றம்பலம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். 'அந்த நாளும் வந்திடாதோ' என்ற நாடகமும் இடம்பெறும்.

## கைத்தொழில் முயற்சிக்கு அரசாங்க அதிபர்பாராட்டு

தாளையடி, வியா.

செம்பியன்பற்று, வடக்கு, தெற்குப்பகுதிகளின் மாதர் முன்னேற்றச் சங்கங்களை வடபகுதி அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகர நேரிற்சென்று பார்வையிட்டபோது தனதுபாராட்டுகளையும் தெரிவித்தார். பருத்தித்துறை எம். பி, திரு. கே. துரைரத்தினமும், பச்சிலைப்பள்ளி, காரியாதிகாரி திரு.வ. கந்தப்பிள்ளை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், திரு. ஜே எஸ். பெரடிறிக் ஆகியோரும் அரசாங்க அதிபருடன் சென்றிருந்தனர்.

இச்சங்கங்கள் அரசாங்க உதவிஎதுவுமின்றி பல்வேறு கைத்தொழில் பொருட்களை உற்பத்செய்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. முதல் முறையாக இந்த நிலையங்களிலிருந்து கருவாடுகள் பார்சல் பண்ணும் பக்கட்டுகள் தயார் செய்யப்பட்டுள்ளது பற்றி அரசாங்க அதிபர்கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

மட்டக்களப்பு, மன்னார் பகுதிகளிலிருந்து இதுவரை சுமார் ரூ.5000 பெறுமதியான கருவாடு பார்சல்கள் செய்யும் மேலுறைகள் தருவிக்கப்பட்டன. சென்ற வருடம் 1000 [illegible] களும், இவ் வ[illegible]ம் 500 மேலுறைகளும் இங்குள்ள பனை செய்யப்பட்டுள்ளன.

## தமிழரசு அங்கத்தவர் கி.ச. தலைவராக தெரிவு

கல்முனை, வியாழன்

கரைவாகு வடக்கு கிராம சபைத் தலைவராக தமிழரசுக்கட்சியைச்சேர்ந்த ஜனாப் இஸெட் எம் மசூர் மௌலானா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தலைவர்தெரிவுகிராமசபை காரியாலயத்தில் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு வி ஏ ஜே காசிநாதர் தலைமையில் இடம்பெற்றது.

கரைவாகு வடக்கு கிராம சபையின் சரித்திரத்திலே தலைவரும், உபதலைவரும் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது இதுவே முதற்றடவையாகும்.

உபதலைவராக தமிழரசுக் கட்சியைச்சேர்ந்த சா சுந்தரநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## முருகதாஸ் சுவாமிகள் 26ல் யாழ். விஜயம்

குரும்பசிட்டி, வெள்ளி

தற்போது இலங்கை வந்துள்ள பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள் தமது கோஷ்டியாருடன் யாழ்ப்பாணப்பகுதியில் உள்ள முருகன் ஸ்தலங்களான நல்லூர், மாவிட்டபுரம், தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயங்களைத் தரிசிக்கும் பொருட்டு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார்.

திருக்கோணமலை கோணேஸ்வரர் கோவிலுக்குச் சென்ற பின்னர் 26-ந் திகதி இங்கு வரும் சுவாமிகள் அன்றைய தினம் மட்டுமே தங்கி நிற்பார் எனத் தெரியவருகிறது.

## இப்படியும் நடக்கலாம்!

கொழும்பு, புதன்

நூறு சதவீதம் சிங்கள மக்களைக்கொண்ட இடமான உட ஹேவா ஹெட்டாவுள்ள விவசாய விஸ்தரிப்புக் கந்தோருக்கு விவசாயப் பகுதியினரால் அனுப்பப்பட்டுள்ள விவசாயம்பற்றிய பிரசுரங்கள் அத்தனையும் தமிழ்மொழியில் இருந்ததாம்!

## புதிய வாக்காளர் ஜாபிதா

உடுப்பிட்டி, வியா.

வடமராட்சி தேர்தல் தொகுதிகளின் புதிய வாக்காளர் ஜாபிதாவைத் தயாரிக்குமாறு வடமராட்சி காரியாதிகாரி இப்பகுதிக் கிராமசேவகர்களுக்கு உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து கிராமசேவகர்கள் துரிதமாகத் தமது வேலைகளைத் தொடங்கியுள்ளனர். புதிய ஜாபிதா தயாரிக்கப்படுவதால் உடுப்பிட்டித் தொகுதியில் தற்பொழுதுள்ளதைவிட மேலும் 6,000 வாக்காளர் அதிகரிக்கப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை கம்பன் கழகம் கம்பராமாயணச் சொற்பொழிவுத் தொடரின் ஐந்தாம், ஆறும், ஏழாம்சொற்பொழிவுகள் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் 24, 25, 26-ம் திகதிகளில் நடைபெறும். திரு சி இலக்குமணன் 'அயோத்திகாண்டம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

## 'பாலத்தைதிறந்துவிடுக'

நெடுந்தீவு, வியா.

[illegible] த்தை உடனடியாக திறந்து [illegible] தமிழ் எம்.பி.க்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று நெடுந்தீவு சமூகமுன்னேற்றச் சங்கத்தினர் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர்.

# தீவுப்பகுதி குடிநீர் பிரச்னை

## நாளைய மாவட்ட இணைப்புக் குழு கூட்டத்தில் ஆராயப்படும்

குரும்பசிட்டி, வெள்ளி

நாளை யாழ்ப்பாணத்தில் உள்ள அரசாங்க செயலகத்தில் நடைபெறும் யாழ். மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் தீவுப்பகுதிக் குடிநீர்ப் பிரச்னை பற்றியும் ஆராயப்படுமெனத் தெரிய வருகிறது.

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை, தமது தொகுதியைச் சேர்ந்த வாதரவத்தைக் கிராமத்தில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாடு பற்றி இக்கூட்டத்தில் பிரஸ்தாபிப்பார். தீவுப்பகுதியில் வறட்சியினால் ஏற்படும் நன்னீர் பற்றுக்குறை கடல் உவர் நீரினால் விவசாய நிலங்கள் சேதமடைவது குறித்து ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரவிருக்கிறார்.

# யாழ்ப்பாணத்தில் விவசாய ஆராய்ச்சி பண்ணை நிலையம்

## விரைவில் திருநெல்வேலியில் நிறுவப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

விவசாய ஆராய்ச்சிப் பண்ணை நிலையமொன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருக்கிறது.

இந்த நிலையம் உணவு விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டாவின் நடவடிக்கையைத் தொடர்ந்து இங்கு அமைக்கப்பட விருக்கிறது.

தற்பொழுது திருநெல்வேலியில் நிறுவப்பட்டுள்ள கமத்தொழிற் பயிற்சிப் பாடசாலையுடன் இணைத்து இந்த ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படுமெனத் தெரிய வருகிறது.

# பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தரஸ்தானம்

## செனட்டர் கென்னடி யோசனை

வாஷிங்டன்' ஜூலை 21

பாதுகாப்பு சபையின் தற்போதைய நிரந்தர அங்கத்தினர்களை அப்படியே வைத்துக்கொண்டு, நிரந்தர அங்கத்தினராக இந்தியாவையும் சேர்க்கவேண்டும் என செனட்டர் ரொபர்ட் கென்னடி இன்று யோசனை கூறினார்.

போர்மோஸாதொடர்ந்து பாதுகாப்பு சபையிலும், பொதுச்சபையிலும் இருக்க வேண்டும் எனக்கூறிய கென்னடி, சீனாவை ஐ. நா.வில் அனுமதிக்கவேண்டும் என்றும் கூறினார்.

இவ்விஷயத்தில் தீர்மானம் ஒன்றைத் தாக்கல் செய்ய அமெரிக்கா முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அமெரிக்கா. ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், போர்மோஸா ஆகிய நாடுகள் தற்போதைநிரந்தர பாதுகாப்பு சபை அங்கத்துவநாடுகளாகும்,

## 'மும்மொழியும் படிக்க வசதி செய்க'

கொழும்பு, வியாழன்

''கல்வி அமைச்சரின் வெள்ளைஅறிக்கை நாட்டின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை உள்ளவர்களுக்கு குழப்பத்தை உண்டாக்கியுள்ளது என்பதைநாம்அறிவோம்,

நாட்டின் ஐக்கியத்தையும் பொருளாதார, தொழிற் துறை முன்னேற்றத்தையும் வளர்க்க கல்விஅறிவே முக்கியமானது.

ஆகவே, தேசிய முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு எமது பிள்ளைகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும்படிக்கஆவன செய்யவேண்டும். ஜி. சி. ஈ. பரீட்சைக்கு இம்மூன்று பாடங்களையும் கட்டாய பாடங்களாக்குவதன் மூலம் இதைச் செய்யலாம்''.

இவ்வாறு மலைநாட்டுக்கல்விச் சபைக் காரியதரிசி திரு. வி. முக்கப்பிள்ளை, கல்வி அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## சந்தேக நபர்கள் சரணடைந்தனர்

### நெடுந்தீவு முக்கொலை வழக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

நெடுந்தீவு முக்கொலை வழக்கு சம்பந்தமாக பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த கந்தையா சதாசிவம் என்பவரும், வைரவநாதர் செல்லப்பா என்பவரும், ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் திரு. ரீ. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் நேற்றுக்காலை சரணடைந்தார்கள்.

கந்தையா சதாசிவம் என்பவர், அவரது வழக்கறிஞர்களான அட்வகேட் மீ. கணேசலிங்கம், புறக்டர் பி. கதிரவேலு ஆகியோர் மூலமும், வைரவநாதர் செல்லப்பா என்பவர் அவரது புறக்டரான ஆர். விஸ்வநாதன் மூலமும் சரணடைந்தார்கள். மாஜிஸ்திரேட் சாரணையை ஆகஸ்ட் மாதம் 4-ம் தேதி ஒத்திவைத்தார்.

## யுதாண்டும் நீதிமன்றத் தீர்ப்பும்

நியுயோர்க், ஜூலை 21

''தென்மேற்கு ஆபிரிக்கா பற்றி எனது சொந்தக் கருத்து எப்படியிருந்தபோதிலும் உலக நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து நாம் ஏதும் கூறமுடியாது'' என ஐ நா. அதிபர் யுதாண்ட் கூறினார்.

தென்மேற்கு ஆபிரிக்கா சம்பந்தமாகத் தீவிர போராட்டம் தொடங்க இப்போது தருணம்வந்துவிட்டதென கென்யா ஆளுங்கட்சி அறிவித்திருக்கிறது

நீதிமன்றத் தீர்ப்பு காரணமாகத் தென்னாபிரிக்காவில் பகிரங்க பூசல் ஏற்படுமெனக் கருதப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையர் மன்றம்

## காதல் திருமணம் வேண்டாம்!

சிரம் தாழ்த்தி வணங்க வேண்டிய பெண்கள் லகை உய்வித்த புத்தன், ஜீவகாருண்ணிய சீலன் மகாத்மா காந்தி போன்ற உத்தம மகான்களை ஈன்று இதிகாசங்களிலேயும் எண்ணற்ற சிறந்த நூல்களிலேயும் அழியாத இடம்பெற்றுள்ள நம் குலப்பெண்களின் வழித்தோன்றல்களாகிய எம் சகோதரிகள் காதல் என்னும் கொடியரக்கன் கையில் சிக்கித் தவிக்கிறார்கள். பெண்கள் என்றுதான் இக்கொடியரக்கனின் கோரப் பிடியில் நின்று விடுபடுகிறார்களோ! அந்நாளே பெண்குலத்தின் பொன்னாளாகும்.

மனிதன் மண்விட்டு விண்ணில் பவனிவரும் இவ்விஞ்ஞான நூற்றாண்டிலே பல படித்த பெண்கள் காதலைக் கட்டியழுகிறார்கள். 'காதல் காதல் இன்றேல் சாதல் சாதல்' என்று கூறிக் கொண்டு தங்கள் பொன்னான நேரத்தை மண்ணாக்குகிறார்கள். காதல் என்னும் கானலை நம்பிக் கற்பைப் பறிகொடுத்து நிற்கும் கன்னியர்களும், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் காதலில் தோல்வியுற்று வாடும்பெண்களும் இன்று நம்நாட்டிலே காட்சியளிக்கின்றார்கள்.

ஓர் ஆடவன் ஒரு மங்கையைக் கண்டு காதல்கொள்கிறான். 'மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கண்ணே! அகிலமெல்லாம் சேர்ந்து என்னை எதிர்த்தாலும் நானுனைக் கைவிடேன்' என்று கூறி அவள் கற்பைச் சூறையாடி ஏப்பம்விட்ட பின்னர்- அவளை ஒரு சிசுவுக்குத் தாயாக்கிய பின்னர் உன்னை நான் அறியேன் என்று கூறி சென்றுவிடுகிறான். அப்படிப்பட்ட ஆடவர்களால் கைவிடப்பட்ட பெண்கள் கையில் சிசுவுடனும், கண்ணில் கண்ணீருடனும் வாழ வழி தெரியாமல் ஊராரின் விபச்சாரி என்ற வசைமொழியைக் காது கொடுத்துக் கேட்க மனமில்லாமல் மானமிழந்து உயிர்வாழ்வதைவிட மரணமே மேல் என்றெண்ணிச் சாவின் மடியிலே சாந்திதேடிக் கொள்கிறார்கள். இன்னும் சில படித்த ஆண்கள் பெண்களை மனமார நேசித்து உறவாடிய பின்னர் சீதனமில்லை என்று குறைகூறியும், சாதிப் பாகுபாடுகளை அகற்றி வாழத் துணிவின்றியும் காதலித்த பெண்களைக் கைவிட்டும் ஓடுகின்றார்கள். இதுவே இன்றைய காதலுலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பெண்ணினத்திற்கு பல விதமான துன்பங்களையுண்டாக்கும் காதலுக்காக அல்லலுறுவதும் உயிர் விடுவதும் மடமையான காரியமாகும். பெண்களே! ஒரு ஆண் பல பெண்களைக் காதலிக்கலாம் கைவிடலாம். ஆனால் ஒரு பெண் ஒரு ஆணால் கைவிடப்பட்டால் அவள் வாழ்வு இருண்ட பாலைவனமாகிவிடும். காதலென்பது இக்கால ஆடவர்களின் அகராதியில் மறைமுகமாக விபச்சாரமென்று எழுதப்பட்டிருக்கிறது. அத்துடன் காதல் படித்தவர்களின் அவள் கற்பைச் சூறையாடிபொற்றலாகவுமிருக்கிறது.

## பெண்ணிருந்தால்.....!

(ஜீவா. நாவுக்கரசன்)

பெண்ணில்லை யென்றால் இவ்வுலக மில்லை
பேரின்பம் பெருங்கருணை அறமு மில்லை
கண்ணில்லை யென்றால் நற்காட்சி யில்லை
காணரிய இயற்கைதந்த அழகு இல்லை
விண்ணில்லை யென்றால் தேன்நிலவு இல்லை
விளங்குபகல் இரவு என்ற விளக்க மில்லை
எண்ணில்லை உயிரில்லை இறைவ னில்லை
எழுதுகின்ற நானில்லை நீங்களில்லை.

பெண்ணிருந்தால் வளம்சுரக்கும் வாழ்வு வேண்டும்
பேரின்ப சாகரத்தில் திளைக்க வேண்டும்
கண்ணிருந்தால் அவள் அழகைக் காண வேண்டும்
காதலினால் ஒன்றாகிக் கனிய வேண்டும்
விண்ணிருந்தால் தேன்நிலவு பவனி வேண்டும்
விழிபேச மௌனத்தில் ஊடல் வேண்டும்
எண்ணிருந்தால் வாழ்நாளை எண்ண வேண்டும்
இணையற்ற கோடிநாள் வாழவேண்டும்.

சூழ்கின்ற காதலினால் இணைந்து வாழ்ந்து
சுகதுக்கம் வறுமைதுயர் எல்லாம் தாங்கி
வாழ்கின்ற மக்களுக்கு அமுதம் ஊட்டி
வாடாமல் கண்விழித்து நோய்கள் போக்கி
ஆழ்கின்ற பொன்மொழிகள் அனைத்தும் காட்டி
அன்பிற்கோர் இலக்கணமாய் வாழ்ந்துநாளும்
மாழ்கின்ற தாய்க்குலத்தை மதிக்க வேண்டும்
மங்கையரைத் தங்கையராய்ப்பேணல்வேண்டும்

கல்வியில்லை உரிமையில்லை மொழியு மில்லை
கணவன்மார் மனைவியரை வதைக்கும் தொல்லை
எல்லையில்லை ஏனென்று கேட்பாரில்லை
இல்லறத்தின் மாண்பதனை உணர்வாரில்லை
புல்லுமில்லை பிள்ளைபெறு கருவியில்லை
புணர்வதற்கு போகத்தின் மலரு மில்லை
நல்லதில்லை ஆண்களின்று செய்யுந் தொல்லை
நங்கையர் தாம் சுகம் பெறுவதெந்த நாளோ!

## கூந்தல் வளர....

கூந்தலுக்கு விட்டமின்கள் அவசியமாகும். ஸ்பினச் கீரை, முட்டைகோஸ், எலுமிச்சம் பழச்சாறு இவற்றைச் சமபங்குகளில் சேர்த்துத் தேய்ப்பது மெல்லிய முடிகளுக்கு நல்லது. கூந்தல் வளர்ச்சி குறைவாக இருந்தால், காரட், எலுமிச்சம் பழச்சாறு இவற்றை சேர்த்துத் தலையில் தேய்க்க வேண்டும்.

தலையின் தோலை விரல்களால் முன்நெற்றியிலிருந்து பின்புறம் வரைதேய்க்கலாம்.

சத்துள்ள கலவைகளையும் தேய்க்கலாம். சுத்தமான ஆலிவ் எண்ணெயில் ஐந்து மேசைக்கரண்டி எடுத்து சிறிது சுடவைத்து ஒரு எலுமிச்சம்பழ மூடியின்சாற்றை பிழிந்து கலந்து இரவில் தேய்த்துப் பின்காலையில் கழுவிவிடவேண்டும். மாதம் மூன்று நான்கு முறை இவ்வாறு தேய்க்கலாம். இல்லாவிட்டால் இரண்டு முட்டை மஞ்சள்கரு, அரை எலுமிச்சம்பழம், ஒரு மேசைக்கரண்டி ஆல்மண்டு எண்ணெயும் கலந்தும் தேய்த்தல் நன்று.

செல்வி சிவஞானவதி கோபாலபிள்ளை.
(ஆதாரம்: சோவியத்நாடு)

சுருங்கக் கூறின் பெண்கள் என்னும் மீன்களைப் பிடிக்க ஆண்கள் வைத்திருக்கும் மோகனத் தூண்டிலின் பெயரே காதல்.

புற்றிலே விஷப்பாம்புகள் இருப்பது போல், நம் சமூகத்திலேயும் சில நேர்மையற்ற ஆண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் பெண்களை ஆசைகாட்டி மோசம் செய்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட ஆண்கள் மத்தியிலே பெண்கள் நிதானமாக இருக்க வேண்டும். காதலைப் பெண்கள் அடியோடு வெறுக்க வேண்டும். தெய்வத்திற்கொப்பான பெண்கள் மானமிழந்து, மரியாதையிழந்து, பெண்மையிழந்து வாழ்வதற்குக் காரணமான காதலை மனதாலும் நினைக்கக் கூடாது. காதலென்பதில்லையேல் இல்லறவாழ்வு சாரமற்றது என்று பல படித்த பெண்கள் கூறுகிறார்கள். இது மிக மிகத் தவறு. அப்படியானால் காந்திமகான் கஸ்தூரிபாயைக் காதலித்தா மணம் புரிந்தார், வள்ளுவன் வாசுகியைக் காதலித்தா மணம் புரிந்தார். இல்லவே இல்லை.

சகோதரிகளே! காதலித்தால்தான் வாழலாமென்றெண்ணி வண்ணமலர் பூத்துக் குலுங்கும் சிங்காரத் தோட்டம்போல் வாழ வேண்டிய உங்கள் வாழ்க்கையைக் கல்லும் முள்ளும் நிறைந்த துன்பம் மிகுந்த பாதையாக மாற்றாதீர்கள். "காதல் வயப்பட்டுக் கலியாணம் செய்கிறவள் துன்பத்தில் வாழ்ந்துதான் ஆக வேண்டும்" என்ற ஸ்பானிய பழமொழியொன்றை நினைவுகூர்ந்து திருமணத்துக்கு முன் காதல் செய்வதை விடுத்து பெற்றோர் செய்து வைக்கும் திருமணத்தின்பின் உங்களுக்கென உரிமையாக்கப்பட்ட உங்கள் கணவன்மேல் உயர்ந்த அன்பு செலுத்தினால் அதுவே உன்னத காதலாகும். அப்போது பெண்ணின் பெருமை ஓங்கும். பெண்குலம் தழைக்கும்.

## சிறந்த மனையாளுக்கு

○ காதலொருவனைக் கைப்பிடித்தே அவன், காரியம் யாவினும் கை கொடுத்து வாழவேண்டும் என்றார் பாரதியார் சிறந்த மனைவிக்கான பண்புகள் எவை என்பதை முப்பத்தாறு ஆண்டுகள் மனைவியாக வாழ்ந்த அம்மையார் ஒருவர் தம் அனுபவவாயிலாகக்கூறுகிறார். இதோ தெரிந்துகொள்ளுங்கள்.

○ உங்கள்கணவரை நன்கு அறிந்து கொள்ளுங்கள். புதுமை நிறைந்த அவரின் நிறைவுகளையும் குறைவுகளையும் தெரிந்துகொள்ளுங்கள். நிறை உங்களை மயக்கும்; நிறைவு உங்களை வருத்தும்; ஆனால் குறைவிலும் நிறைவுகாணுங்கள்.

○ கணவரின் தொழிலுக்கு மதிப்புக் கொடுங்கள். தோட்டி வேலை செய்பவராயினும் உங்கள் கணவரின் தொழிலே சிறந்தது என மதிக்கத்தெரியவேண்டும். அவருடன் அவரின் தொழிலையும் மணந்துள்ளீர்கள் என்பதை மறக்காதீர்கள். 'வினையே ஆடவர்க்குயிரே' என்பது முதுமொழி.

○ கணவர் கோபம்கொள்ளும்பொழுது சாந்தமாக இருங்கள் தன் உணர்ச்சிகளை முழுக்க முழுக்க உங்களிடம் தான் அவர் தெரிவிக்க முடியும். பொறுத்துச் செல்வது உங்கள் கடனே. தெரியாவிடில் பயின்று கொள்ளுங்கள்

○ வெற்றியோ தோல்வியோ, ஆண் பெண்ணிடத்தில் தான் மகிழ்வையோ அனுதாபத்தையோ எதிர்பார்க்கிறார். உங்கள் கணவருக்கு நீங்களே அந்தப் பெண்.

○ தன் எண்ணங்கள், கனவுகள், ஆசைகள் பிரச்னைகள், என்பவற்றை யெல்லாம் யாரிடமாவது சொல்ல வேண்டும். விருப்புடன் கேட்பவரிடம் சொல்ல வேண்டும் அதுவும் பெண் ஒருத்தியிடம் சொல்லவே ஆண் விரும்புகிறான். செவிசாய்க்கப் பழகுங்கள். உங்கள் கணவர் மிக மகிழ்வார் கேட்பதுடன் கருத்துக்களைப் பரிமாறுங்கள் உங்கள் எண்ணங்களையும் பணிவுடன் தெரிவியுங்கள். பல்லைக் கடித்துக்கொண்டு இருக்கவேண்டும்எனினும் இருங்கள்,

○ சிறிய விஷயங்களைப் பெரிது படுத்தாதீர்கள் அவை தாமே தீர்ந்துவிடும்.

○ உங்கள் கணவரிடம் இயல்பாகவே சில பிழைகளைக் காணுவீர்கள் மறந்தும் அதை எண்ணாதீர்கள் இயல்பினை மாற்றமுயலாதீர்கள்.

○ உங்கள் கணவருடன் எந்த விஷயத்தையும் பகிர்ந்துகொள்ளப் பழகுங்கள். மகிழ்வோ, வருத்தமோ, நிறைவோ குறைவோ, அவருக்கும் தெரியட்டும். நீங்கள் தனியவே வாழ முயற்சிக்காதீர்கள்.

○ நீங்கள் படித்தவரா? கணவனைவிட அதிகம்தெரிந்தவர் எனினும் கணவரிடமோ. பிறரிடமோ தெரியுமாறு நடக்காதீர்கள். அடக்கமும் பணிவுமே உங்களின்

(7-ம் பக்கம் பார்க்க)

## சில யோசனைகள்

### குழந்தைகள் செய்த குறும்பு

சின்னம்மா மைதிலிக்கு விதித்த தண்டனை மிகப் பெரியதே தான். பாவம், மைதிலி சிலவேளைகளில் திணறியேவிடுவாள்.

அன்று வெள்ளிக்கிழமை எங்களூர்க் கோவிலுக்கு யானை வந்தது. நாங்களும் புறப்படத் தயார், அயற் கிராமங்களிலிருந்தும் பலர் வந்தனர் ஏகப்பட்ட கூட்டமாயிருக்குமென்று நாம் எண்ணிக் குழந்தை மைதிலியை விட்டுப்போவதாகத் திட்டம் ஆனால் அவளோ தாத்தாவைக் 'காக்கா' பிடித்துக் கிளம்பிவிட்டாள். சின்னம்மாவும் உடனேயே தன் நிபந்தனையை விதித்தார். ஆம், யானை மாதிரி நடக்கவேண்டும்; அது எப்படிச் சாப்பிட்டது; எப்படிக் கும்பிட்டது எல்லாம் வீடுவந்ததும் செய்துகாட்ட வேண்டும் என்பதுதான்.

மைதிலி சனநெரிசலுக்கூடாக அதன் தும்பிக்கையையும், அதன் மேலிருந்த பிராமணரையுந்தான்பார்த்தாள். உயர நின்றவளுக்கு வேறெதுவுந் தெரியவில்லை. வீடு வந்ததும் தன் கையை தூக்கி மோவாயில் வைத்து ஆட்டியாட்டிக் காட்டினாளோ தப்பிவிட்டாள்.

இது முடிந்து ஒரு மாதம். சின்னம்மா கிடுகு பின்னிக் கொண்டிருந்தார். ஒரே முதுகுவலி என்று கூறி முடிக்குந் தறுவாயில் ஓடிவந்த மைதிலி சின்னம்மாவைக் கட்டிப்பிடித்து அவர் முதுகில் ஏறி "தானை, தானை, போ போ" என்றாள். பாவம், சின்னம்மாவும் முதுகு வலியோடு குனிந்த முதுகில் மைதிலியை ஏற்றி. வீட்டைச் சுற்றி வலம்வந்ததைப் பார்க்க வேண்டுமே!

செல்வி குண நடராஜா,
சித்தங்கேணி.





லக்ஷபான பாட்டரிகள்

இறக்குமதியாகும் எந்த பாட்டரியையும் விட குறைந்த செலவில் கூடிய சேவை தருகின்றன.

ஏனெனில்:

* அவை, பூரண சக்தியுடன் தொழிற்சாலையிலிருந்து புதுமை குலையாமல் உங்களை வந்தடைகின்றன. இறக்குமதிபாட்டரிகள் போல சேமிப்பில் இருப்பதால் அவை சக்தி இழப்பதில்லை
* லக்ஷபானபாட்டரிகள், அனைதேச மின் நுணுக்க கமிஷன்விதிக்கும் தரங்களுக்கு நிகரான . அதி உன்னத சிறப்பு வாய்ந்தவை என்று பரீட்சித்து நிரூபிக்கப் பட்டவை.
* லக்ஷபான பாட்டரிகள் இறக்குமதியாகும் எந்த ரகங்களையும் விட மலிவானவை.

எவ்.:.பன்ட் லேட் கார்ப்பரேஷன் லிமிட்டெட்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் போட்டிகள் தரம் குறித்து வித்தியாதரிசி பாராட்டு

நெடுந்தீவு, வியாழன்

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் கிராமச்சங்கத் தலைவர் திரு ம கணபதிப்பிள்ளை தலைமையில் நெழுவினிப் பிள்ளையார்கோவில் மைதானத்தில் நடைபெற்றது

இவ்விளையாட்டுப் போட்டிக்கு நெடுந்தீவுக் காரியாதிகாரி' வைத்திய அதிகாரி, தபாலதிபர் மற்றும்பலர் தீவின் பலபாகங்களிலு மிருந்து வந்தனர். பிரதம விருந்தினராக திரு எம் ஜே சிமான்பிள்ளை (வித்தியாதரிசி) கலந்துகொண்டார்,

தலைவர் தமது உரையில், நெடுந்தீவில் இதுவரையில் தாம்கண்ட விளையாட்டுப் போட்டிகளில் இது சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்டதென்றும், பிள்ளைகள் உடல்வலுவுள்ளவர்களாக வளருவதற்கு இப்படியான விளையாட்டுப் போட்டிகள் அவசியமென்றும் இதன் மூலம் பிள்ளைகளிடம் தியாக உணர்ச்சிகளும், ஒற்றுமையும் தேசியபற்றும் உண்டாகுமென்றும் கூறினர்,

தலைமையாசிரியர் திரு இ வேலுப்பிள்ளை தமது வரவேற்புரையில் பாடசாலையின் வளர்ச்சிபற்றியும், பெற்றோரின் ஒத்துழைப்புப் பற்றியும் குறிப்பிட்டார்· பிரதம விருந்தினர் திரு எம் ஜே சிமான்பிள்ளை(வித்தியாதரிசி) பேசுகையில் சிறந்த ஒரு விளையாட்டுப் போட்டியை இப்பாடசாலை ஆசிரியர்கள் ஒழுங்குசெய்ததைக் காண தாம் மகிழ்ச்சியடைவதாகவும், அவர்களின் ஒற்றுமையையும் திறமையையும் தாம் பாராட்டாமலிருக்கமுடியாதென்றும் கூறினர்.

(8-ம் பக்கம் பார்க்க)




# ஆகஸ்டில் நடைபெறும் ஜமைக்கா காமன்வெல்த் விளையாட்டுப்போட்டி

## இதுவரை கால சாதனைகள் விபரம்

1966 ஆகஸ்ட் மாத முற்பகுதியில் மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த ஜமைக்கா என்ற "டொமினியன்" நாட்டின் தலைநகராகிய கிங்ஸ்டன் என்ற நகரில் பத்தாவது காமன்வெல்த் விளையாட்டுப்போட்டிகள் நடைபெறுகின்றன. பல பிரபல காமன்வெல்த் நாடுகளில் பிரித்தானிய குடியேற்ற நாடுகளும் இப்போட்டிகளும் கலந்துகொள்ளும். இதுபற்றி சிறிது ஆராய்வோம்.

### ஒலிம்பிக் மாதிரி

ஓரளவு ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகள் மாதிரி நடைபெற்று வரும் இப்போட்டிகள் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடைக்காலங்களில் 1930 தொடக்கம் நடைபெற்று வருகின்றன. கனடாவில் ஒன்ராறியோ மாகாணத்தில் ஹமில்டன் நகரில் உள்ள ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த திரு. எம். எம். றொபேட்ஸன் என்பவரே இப்போட்டித் தொடரை 1930ல் ஆரம்பிப்பதற்கு காரணகர்த்தாவாக இருந்தார். 1928ல் அம்ஸ்ரர்டாம் நகரில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட பிரித்தானிய வீரர்கள் இத்தகைய போட்டிகளை நடாத்துவதற்கு முதன் முதலாகத் திட்டமிட்டனர் எனத் தெரிகின்றது.

இப்போட்டிகள் இதுவரை காலத்தில் நடைபெற்ற இடங்கள் வருமாறு:

1930 ஹமில்டன், கனடா 1934 லண்டன், பிரித்தானியா 1938 சிட்னி, அவுஸ்திரேலியா 1942 நடைபெறவில்லை. (2-வது உலக மகா யுத்தம்) 1946 நடைபெறவில்லை. (2-வது உலகயுத்தம்) 1950 ஆக்லாந்து. நியூஸிலாந்து 1954 வான்கூவர், கனடா 1958 காடிவ், வேல்ஸ் 1962 பேர்த். அவுஸ்திரேலியா, 1966 கிங்ஸ்டன், ஜமைக்கா.

### இலங்கைவீரர் சாதனை

1938 தொடக்கம் பெண்களும் இப்போட்டிகளில் பங்கு பற்றி வருகின்றனர். 1938ல் நடைபெற்ற இப்போட்டிகளில் இலங்கைவீரராகிய திரு. டபிள்யு டபிள்யு தம்பிமுத்து நீளம்பாய்தல் நிகழ்ச்சியில் ஆறுவது இடம் பெற்ருர். 1950ல் நடைபெற்ற போட்டிகளில் இலங்கை வீரராகிய திரு. டங்கன்வைற் என்பவர் 440 யார் தடையோட்டத்தை 52 1/2 விநாடியில் தாண்டி ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தினுர் என்பது குறிப்பிடத்தக்கது.

### புதிய சாதனைகள் ஏற்படுத்தலாம்

அடுத்த மாதம் நடைபெறும் இப் போட்டிகளிலும், உலக சாதனைகளை முறியடித்து பல வீரர்களும் வீரமணிகளும் கலந்துகொள்ள இருப்பதால் இப்பொட்டிகளில் பல சாதனைகள் ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது கனடாவைச் சேர்ந்த ஜெரோம், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த றுான் கிளாக், கெனியாவைச் சேர்ந்த கெய்னு ஆகியோரைக் குறிப்பிடலாம். கனடாவைச் சேர்ந்த திரு. ஹரி ஜெரோம் என்பவர் 100 யார் தூரத்தை 9.1 விநாடியில் ஓடி உலக சாதனையை15-7-66ல் சமப்படுத்தினுர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலியா வீரராகிய திரு. றுான் கிளாக் என்பவர் உலகில் முதன் முதலாக மூன்று மைல் தூரத்தை 13 நிமிஷத்திற்குக் குறைவான நேரத்தில் ஓடியவர் என்பதும் கவனிக்கத்தக்கது. கடந்த 5-7-66ல் இத்தூரத்தை 12 நிமிஷம் 50.4 விநாடியில் ஓடி தமது முன்னைய உலகசாதனையை மிஞ்சியுள்ளார். காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சாதனைகள் பின்வருமாறு:

### உலக சாதனைகள்

ஆண்கள்: 100 யார் 9.4 விநாடி கீத்காட்னர் (ஜமேக்கா) 1958, 220 யார் 21.0 விநாடி இக்காட்னர் (ஞமைக்க) 1958, 440 யார் 46.6 விநாடி மில்க்காசிங் (இந்தியா) 1958, 880 யார் 1 நிமிடம் 47.6 விநாடி நீற்றன்நெல் (நியுஸிலாந்து) 1962, 1 மைல் 3 நிமிடம் 58.8 விநாடி ஆர். ஜே. பனிஸ்ரர் (இங்கிலாந்து) 1954, 3 மைல் 13 நிமிடம் 15 விநாடி எம், ஜி. ஹல்பேக் (நியூஸிலாந்து) 1958, 6 மைல் 28 நிமிடம் 26.6 விநாடி பி. கிட் (கனடா) 1962, மரதன் 2 மணி 21 நிமிடம் 17 விநாடி பி. கில்பி (இங்கிலாந்து) 1962, 120 யார் தடையோட்டம் 14 விநாடி கீத்காட்னர் (ஜமேக்கா) 1958, 440 யார் தடை ஓட்டம் 49.7 விநாடி ஜி. பொற்கீற்றர் (தெ. ஆபிரிக்கா) 1958, 4X110 யார் அஞ்சலோட்டம் 40.6 விநாடி இங்கிலாந்து 1962, 4X440 யார் அஞ்சலோட்டம் 3 நிமிடம் 8.1 விநாடி தென் ஆபிரிக்கா 1958, நீளம்பாய்தல் 26 அடி 5 அங்குலம் மைக் அஹேற (கானு) 1962, முப்பாய்ச்சல் 53 அடி 2 அங்குலம் ஐ. தொம்லின்ஸன் (அவுஸ்திரேலியா) 1962, உயரம் பாய்தல் 6 அடி 11 அங்குலம் பி. ஹொப்ஸன் 1962, தடியூன்றிப்பாய்தல் 14 அடி 9 அங்குலம் டி. பிக்கின் (அவுஸ்திரேலியா) 1962. குண்டு எறிதல் 59 அடி 4 அங்குலம் எம். லக்கின் (இங்கிலாந்து) 1962. பதிரிவட்டம் விசுதல் 185 அடி 3 1/2 அங்குலம் டபிள்யு. செல்வே (அவுஸ்திரேலியா) 1962, ஈட்டி எறிதல் 256 அடி 3 அங்குலம் ஏ. மிச்செல் (அவுஸ்திரேலியா) 1962, சம்மட்டி எறிதல் 206 அடி 4 1/2 அங்குலம் எம். ஜே. எலிஸ் (இங்கிலாந்து) 1958, 3000 மீட்டர் ஸ்ரீப்பிள்சேஸ் 8 நிமிடம் 43.4 விநாடி டி. லின்லெஸ்ரி (அவுஸ்திரேலியா 1962.

### பெண்கள்

100 யார் 10.6 விநாடி விலாட் மத்தியூஸ் (அவுஸ்திரேலியா) 1958, 220 யார் 23.6 விநாடி விலாட் மத்தியூஸ் (அவுஸ்திரேலியா) 1958, 880 யார் 2 நிமி. 3.7 விநாடி டி. வில்

(8-ம் பக்கம் பார்க்க)

## சிறந்த . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி. உங்கள் கல்வி கணவனிற்குப் பயன்படல்வேண்டும் அவரின் இல்லம் தொழில்இவை சிறக்க அது உதவ வேண்டும்,

○ திருமணம் என்பது ஒற்றுமையே அன்றி ஒருமைப்பாடல்ல; வேறுபட்ட கருத்துக்கள் சந்திக்கும் இடம் அன்றிச் சங்கமிக்கும் இடம் அல்ல. வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டு வாழ்வதே சிறந்த இல்லற வாழ்வு.

எளிமையான இனிமையான சுலபமான வழியும் ஒன்று உண்டு. அது உங்கள் கணவரை மகிழச் செய்வது தான். எவ்வாறு? அவர் சுத்தத்தை விழைபவரா! நீங்கள் சுத்தமாக இருங்கள் நண்பர்களிடையே வாழ விரும்புவாரா? அவரின் நண்பர்களை உபசரிக்கப் பழகுங்கள். அலுப்பு நிறைந்த அலுவலரா? வீட்டினை ஒய்வு நிறைந்த இடமாக்குங்கள். நீங்கள் உடன் இருப்பதை விரும்புபவரா? அட கடவுளே — வேறென்னவேண்டும். உடன் இருங்கள். திருமணம் படகு; கணவர் துடுப்பு—நீங்கள் சுக்கான். படகின் திசை சுக்கானின் போக்கிலேயே தங்கியுள்ளது. வாழுங்கள் — மகிழுங்கள்.

ஆதாரம்: ரீடர்ஸ் டைஜஸ்ட்

தகவல்; மறவன்புலோ சச்சிதானந்தன்

## கை வைத்தியம்

குப்பைமேனி இலை, மூக்கிரை இலை, உப்பு இம்மூன்றையும் ஒன்ருய் நசுக்கி கைகால், இடுப்பு வலிகளுக்கு நோயுள்ள இடத்தின் மேல் தேய்த்தால் வலி நீங்கும்.

இளநீரில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து சாப்பிட்டாலோ அல்லது எலுமிச்சம்பழச்சாற்றில் சர்க்கரையைக் கலந்து சாப்பிட்டாலோ வயிற்றுக் கடுப்பு நீங்கும்.

வல்லாரை இலை, முசுமுசுக்கை இலை, உப்பு இம்மூன்றையும்சேர்த்துக் கசக்கிப் பிழிந்துகொண்டு இலவங்கம், திப்பிலி கொஞ்சம் பொடிசெய்து போட்டுத் தேனில் கலந்து சாப்பிட்டால் குரல் கம்மல் இல்லாமற் போகும்.

சரசு சம்பந்தம்

ஜோன் கிறின் அன்ட் கம்பனியார் அளிக்கும் மற்றெரு புதிய உற்பத்திப் பொருள்தான்

கிறீக்கோ சுப்பர் கோப்பி

அது புதியது! மிகுந்த நறுமணம் கொண்டது!! வாய்க்கு ருசியானது!!!

கொழும்பில் உள்ள "கிறீக்கோ" கைத்தொழில் நிலயத்தில் விசேஷ தயாரிப்பு முறைகள் மூலம் வறுத்து அரைக்கப்பட்ட திறமான கோப்பி.

எங்கள் யாழ்ப்பாண ஏஜண்டுகளான எம். எம். ரி. பி., 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ஸ்தாபனத்திடமிருந்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோன் கிறீன் அன்ட் கோ.,

86, வால்ஸ் ஒழுங்கை, — — கொழும்பு—15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கட்சி....

(1ம்பக்கத் தொடர்ச்சி)

கூடாது என்று எவரும் சொல்லவில்லை ஆனால் அதற்கு தமிழரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி ஒப்பந்தம் தான் பரிகாரம் என்பதில்லை.

## 'மௌனம் ஏன்?'

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள ஆசிரியர் காலடி எடுத்துவைக்க அனுமதிக்க முடியாது என டாக்டர் நாகநாதன் கூறியிருக்கிறார். இப்பகுதிகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதற்கு பிரதமர் எவ்விதநடவடிக்கை மேற்கொண்டு வருகிறார் என்பதை அறிய நான் ஆவலாயிருக்கிறேன்' என சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை தான விவாதத்தை எதிர்க்கட்சி சார்பில் முடித்துவைத்துப்பேசுகையில் கேட்டார்

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தமிழ் மொழி விசேஷ விதிகள் மசோதாவை ஜனப்பிரதிநிதிகள் சபையில் கொண்டு வந்தபோது வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் சிங்கள அமுல் நிதர்சனமாக இருக்குமென கூறியிருந்தார் எனக் குறிப்பிட்டுப் பேசிய திரு. பீலிக்ஸ் தேசிய ஐக்கியம் பற்றி முன்னர் பேசிய ராஜாங்க மந்திரி இப்போது அனேகமாக ஒவ்வொரு அரசாங்க அங்கத்தவரும் தமிழரசுக் கட்சி அங்கத்தவரும் ஐக்கியம் பற்றி பேசுகையில் இது பற்றி ஏதும் குறிப்பிடாமலிருப்பது வியப்பாக இருக்கிறது எனக்கூறினார்.

## சிங்கள ஆசிரியர்கள்

## பிரதமர் பேச்சு

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணைமீது அரசாங்கத் தரப்பில் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா பேசுகையில் பின்வருமாறு கூறினார்:-

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அவசியமான பகுதிகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புமுன்பதாக தமிழரசுக் கட்சியுடனும் கல்வி அமைச்சருடனும் ஆலோசனைகள் நடத்துவேன். நான் சமூக சௌஜன்யத்தை உருவாக்கும் கொள்கையையே கடைப்பிடிப்பேன் நூற்றுக்கு நூறுவீதம் நாட்டில் ஐக்கியம் உருவாகவில்லையென்பது உண்மைதான், ஆனால் முன்னர் நிலவிய கசப்புமனப்பான்மைக்கும் அவநம்பிக்கைக்கும் மாருக ஓரளவுக்காவது சமூகங்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்த முடிந்ததுபற்றி பெருமையடைகிறேன்.

## திணிக்க முடியாது

ஒருவரின் தொண்டைக்குள் இன்னொருவரால் எதையும் பலவந்தமாகத் திணிக்க முடியாது, தமிழ் மக்களின் தொண்டைக்குள் சிங்கள மொழியை முந்திய அரசாங்கம் திணிக்க முயன்றது இதற்கு ஒரு உதாரணமாகும்.

## பழைய அரசாங்கம்

பல கொடூர நடவடிக்கைகளை மேற்கொண்ட பாதிலும் சிங்கள மொழியை நாடுபூராவிலும் உத்தியோக மொழியாக ஏற்றுக்கொள்ளச்செய்வதற்கு பழைய அரசாங்கத்தால் முடியாமல் போய்விட்டது. ஆனால் நாம் அதை சாதித்திருக்கின்றோம்.

## சவால்

சிங்களமக்கள், மொழிக் கொள்கையில் என்னை ஆதரிக்கவில்லையென்று நீங்கள் நினைப்பதாய் இருந்தால் இந்த பிரச்சினையின் மீது எனது தேர்தல் தொகுதியில் போட்டியொன்றை நடத்தும் சவாலைநான் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கின்றேன். எனது இந்தக் கருத்து தேர்தல் காலத்தில் நிரூபணமாகும். இந்த அரசாங்கத்தின்கீழ்தான் சிங்களம் இலங்கை பூராவிலும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றது.

## பிரேரணை

## நிறைவேறியது

சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும்பிரேரணை நிறைவேறியது. எதிர்கட்சியினர் சமர்ப்பித்திருந்த திருத்தங்கள் தோல்வியுற்றன. வாக்கெடுப்பின்போது எதுவித ஆச்சரியத்துக்குரிய விஷயமும் நிகழவில்லை.

---

# ஆகஸ்டில் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

லிஸ் (அவுஸ்திரேலியா) 1962, 86 யார் தடை ஓட்டம் 10.6 விநாடி பி. கில்போன் (அவுஸ்திரேலியா) 1962, 4X110 யார் அஞ்சலோட்டம் 45.3 விநாடி (அவுஸ்திரேலியா) 1958, உயரம் பாய்தல் 5 அடி 10 அங். ஆர். வூட்ஹவுஸ் (அவுஸ்திரேலியா) 1962, நீளம்பாய்தல் 20 அடி 6 1/4 அங். பி. கில்போன் (அவுஸ்திரேலியா) 1962, குண்டு எறிதல் 51 அடி வி. ஐ. ஸ்ரோப்பர் (நியூசிலாந்து) 1958, பரிதிவட்டம் வீசுதல் 164 அடி 8 1/2 அங். டபிள்யூ. யங் (நியூசிலாந்து) 1962, ஈட்டி எறிதல் 188 அடி 4 அங். அனு மஸேரா (அவுஸ்திரேலியா) 1958.

-- வ. மகாதேவன்

---

# விளையாட்டுப் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

## பச்சை இல்லம்

## முதலிடம்

இல்லப்போட்டியில்பச்சை இல்லம் முதலாமிடத்தைப் பெற்று திரு சு நாகேந்திரர் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது. இரண்டாமிடத்தை நீலஇல்லமும், மூன்றுமிடத்தை வெள்ளை இல்லமும் பெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கு திரு எம் ஜே சிமான்பிள்ளை பரிசுகள் வழங்கினார்.

---

# இன்று

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் திருஊஞ்சல் உற்சவமான இன்று மாலை 6 மணிமுதல் 7-30மணிவரை திருப்பூங்குடி திரு. வி. ஆறுமுகம்ஆசிரியர் திருவிளையாடல் பிரசங்கத் தொடரில் "வருணன் விட்டகடல் வற்றியது" என்னும் பொருள் பற்றிப் பிரசங்கம் நிகழ்த்துவார். இரவு 7-30 மணிக்கு பூசையும் பின் திருஊஞ்சலும் வீதி வலமும் நிகழும்.

# சிரமதான மூலம் வீதி திருத்துவர்

குமுளமுனை, வியாழன்

குமுளமுனைக்கும், தண்ணீர் முறிப்புக்கும் இடையில், சீர்கேட்டிலுள்ள பிரதான வீதியை குமுளமுனையிலும் அதன் அயல்கிராமத்திலும் உள்ள மக்கள் சிரமதான மூலம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்

---

# பிரதமர், மந்திரி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## முதல்நாள் நிகழ்ச்சிகள்

முதலாவது நாள் நிகழ்ச்சி ஆகஸ்ட் 7ந் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம்நகர மண்டபத்தில் அமைக்கப்படும் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அரங்கில் ஆரம்பமாகும். அன்றுகாலை கட்சிக்கொடி ஏற்றி வைக்கப்படும். இதனைத்தொடர்ந்து பிரதிநிதிகள்மகாநாடு நடைபெறும். வவுனியா எம். பி. திரு ரி சிவசிதம்பரம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் விசேஷ உரை நிகழ்த்துவார் இதன்பின் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படும். பிரதிநிதிகள் மகாநாட்டில் அனுமதிச்சீட்டு உள்ளவர்கள் மட்டும் கலந்துகொள்வார்கள்.

அன்று பிற்பகல் 2மணிக்கு புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு நடபெறும்.

மாலை 6 மணிக்கு திறந்தவெளி அரங்கில் அமைக்கப்படும் ஆனந்தக்குமாரசுவாமி அரங்கில் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

## இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள்

ஆகஸ்ட் 8-ம் திகதி காலை 9 மணிக்கு இரண்டாம்நாள் நிகழ்ச்சி யாழ்.நகர மண்டபத்தில் ஆரம்பமாகும் அன்றுகாலை தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணி மகாநாடு வாலிப முன்னணித் தலைவர் திரு. ரி சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும். இதனைத் தொடர்ந்து மாதர் முன்னணி மகாநாடு நடைபெறும்.

பிற்பகல் 2மணிக்குதொழிலாளர் மகாநாடு ஆரம்பமாகும். மாலை 6 மணிக்கு திறந்தவெளி அரங்கில் அமைக்கப்படும்சேர் ஆனந்தகுமாரசாமி அரங்கில் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

## மூன்ரும்நாள் நிகழ்ச்சிகள்

ஆகஸ்ட் 9-ம் திகதி காலை 9-30 மணியளவில் விசேஷ விமானத்தில்பிரதமர் டட்லி சேனநாயகாவும், மந்திரிகளும் பலாலி விமான நிலையத்தை வந்தடைவார்கள்.

அங்கிருந்து மோட்டார் பவனி ஊர்வலம் ஆரம்பமாகி நண்பகல் 12மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடையும். விமானநிலையத்திலிருந்து, யாழ்ப்பாணம் வரை பலவிடங்களில் வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 2 மணிக்கு பல தொகுதிகளிலிருந்தும், வாலிப முன்னணியினரின் சைக்கிள்ஊர்வலங்கள் ஆரம்பமாகி பொதுக்கூட்டத்தை வந்தடையும்.

யாழ்ப்பாணம் கோட்டை முற்றவெளி மைதானத்தில் மாலை6 மணியளவில்பொதுக் கூட்டம் ஆரம்பமாகும்.

## வாலிப முன்னணி கூட்டு

வாலிபமுன்னணி சார்பில் மகாநாட்டிற்கு சமர்ப்பிக்கபடவிருக்கும் தீர்மானங்கள் பற்றி இறுதி முடிவு, இம்மாதம் 30ந்திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்வாலிபமுன்னணிக் கூட்டத்தில் செய்யப்படும்.

திருகோணமலை, மட்டக்களப்பு, பருத்தித்துறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள வாலிபமுன்னணி கிளைகளிடமிருந்து பல தீர்மானங்கள் வந்து சேர்ந்திருப்பதாக வாலிபமுன்னணி செயலாளர் திரு. எஸ். சிறிதரன் தெரிவித்தார்.

## சம்மேளனக்கூட்டம்

தொழிலாளர் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் [illegible] ஆராயவும், தொழிலாளர் மகாநாட்டிற்கான ஒழுங்குகள் செய்வதற்காகவும், தேசிய தொழிற்சங்கசம்மேளனத்தின் கூட்டமொன்று இம்மாதம் 24-ந் திகதிகாலை யாழ்ப்பாணத்திலுள்ள சம்மேளன காரியாலயத்தில் நடைபெற விருக்கின்றது.

---

# முன்னாள் பொலிஸ்கான்ஸ்டபிள் கொலை வழக்கு

## விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

பெரியவிளான் கடத்தல் கொலைவழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ் நித்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேக நபர்களான ஐவரையும் பொலிஸார் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர்களில் இரு பெண்களை பொலிஸாரின் விண்ணப்பத்தை தொடர்ந்து மாஜிஸ்திரேட் விடுதலை செய்தார்.

சங்கானைப் பொலிஸாரால் தாக்கல்செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில், 29 வயதான முன்னாள் பொலிஸ்கான்ஸ்டபிள் சுப்பிரமணியம் சிவகுருநாதனை எஸ். கந்தசாமி எஸ். மாணிக்கம், எஸ். [illegible]னத்துரை ஆகியோர் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களில் மற்றும் இருவரான கந்தசாமி பெண் பூமணி, மகேந்திரன் பெண் லூர்த்தம்மா ஆகியோர் விடுதலைசெய்யப்பட்டனர்.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் ரி. கணேசலிங்கம், புறக்டர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர். 3-ம் எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ் சண்முகநாதன் புறக்டர் பி. எம். நவரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

மாஜிஸ்திரேட் ஆகஸ்ட் 1-ம் திகதிவரை விசாரணையை ஒத்திவைத்தார்.

---

# 'வீட்டுக்குள் நுழைந்தவர்கள் குழந்தையைக் கொன்றனர்'

## விசாரணையின்போது சாட்சியம்

பாணந்துறை, வியாழன்

இங்குள்ள கிணறொன்றுக்குள் மூன்றுவயதுக் குழந்தையின் சடலமொன்றுகிடக்கக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. பாணந்துறையைச் சேர்ந்த குயிலின் பெர்ணண்டோவே இந்தக் குழந்தையின் தாயாராவர். இக்குழந்தையின் மரணம் குறித்து பாணந்துறை மாஜிஸ்திரேட் ஸ்தலத்தில் மரணவிசாரணை நடத்தினர்.

இறந்த குழந்தையின் தாயார் குயிலின் பெர்ணன்டோ வீட்டில் தனித்து இருந்தபோது நான்கு ஆண்கள் வீட்டுக்குள் நுழைந்ததாகவும், பயத்தினுல் அவர் தனது சகோதரிவீட்டுக்கு இரண்டாவது குழந்தையை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டதாகவும், இறந்துபோன குழந்தையை அவர்கள் கொன்றுவிட்டதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. மாஜிஸ்திரேட் தீர்ப்பை பின்போட்டுள்ளார். பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

---

# சாவகச்சேரியில் வாலிபன் சுருக்கிட்டுத் தற்கொலை

சாவகச்சேரி, வியா

சரசாலையைச் சேர்ந்த 17 வயது வாலிபன் கே. இராஜேஸ்வரன் என்பவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் உள்ள மரம் ஒன்றில் கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கியநிலையில் நேற்றுக் காலை காணப்பட்டார் ஸ்தலத்தில் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகம் மரண விசாரணை நடத்தினர். காலஞ்சென்ற வாலிபரின் பெற்றோர் இதுபற்றி எவரையும் சந்தேகிக்கவில்லையெனச் சாட்சியமளிக்கையில் தெரிவித்தனர்.

விசாரணையின் பின் தற்கொலையென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

---

# ஐயா றன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இருதேச நல்லுறவையும் பலப்படுத்த உதவாது.

விமானத்தபால் மூன்றல்லது நான்கு நாட்களில் கிடைத்து விடுவதாயும் ஆகவேவிமானமூலம்தபாலை அனுப்பலாமென்றும் ஒரன்பர் கூறுகிருர். விமானத் தபால்கூட சிலசமயம் தாமதமாகத்தான் கிடைக்கிறது இந்தியாவுக்கு விமானத் தபால் கட்டணத்தை திடீரெனப் பெரிதும் உயர்த்திவிட்டது முந்திய காருண்ய அரசு! ஏழைகள் இதனுல் விமானத்தபாலைப் பாவிக்க முடியாதபடி தடுக்கப்பட்டுள்ளனர்.

இருதேச அரசுகளும் இதைப்பற்றி நேரில் கலந்து பேசி, இக்குறையைத் தீர்க்க விசேஷ ஒழுங்குகள் செய்ய முடியாதா? ஊதுகிறசங்கை ஊதுகிறேன். விடிகிற போது விடியட்டும்.

ஃ ஃ ஃ

வண்டாடு பூங்குழலாள் பாகன் கண்டாய், மறைக்காட்டுறையு மணாளன் கண்டாய், பண்டாடு பழவினை நோய் தீர்ப்பான் கண்டாய், பரலோக நெறிகாட்டும் பரமன் கண்டாய், செண்டாடி அவுணர்புரஞ் செற்றான் கண்டாய், திருவாரூர்த்திருமூலட்டானன்கண்டாய், கொண்டாடும் அடியவர்தம் மனத்தான் கண்டாய், கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே.

;—அப்பர்சுவாமிகள்

---

# 'ஊர்நம்புமா?'

## நூல் வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நாளை மாலை 'நந்தி'யின் 'ஊர் நம்புமா?' கதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நீதியரசர் ஏச். டபிள்யூ. தம்பையா தலைமையில் நடைபெறும். ஆசிரியர் திரு. இ. மகாதேவா, திரு. சொ. யோகநாதன், திரு. க. கணேசலிங்கம், செல்வி. புஸ்பா செல்வநாயகம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

---

# ஹோ அழைப்பு

ஹாஞேய், ஜூலை 21

பிரெஞ்சு அதிபர் டிகாலை வடவியட்னும் வரும்படி அதிபர் ஹோசிமின் அழைத்திருக்கிருர்.

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி. 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org